Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, SEPTEMBER 18, 2021

சனிக்கிழமை செப்டெம்பர் 18, 2021 | ஒளி: 07 கதிர்: 104 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# மது கொத்தணி அபாயம்?

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டாலும், மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. அங்கு வரிசையில் நிற்போர் அல்லது முண்டியடித்து கொண்டு நிற்போரில் பலர் எவ்விதமான சுகாதார வழிகாட்டல்களையும் பின்பற்றவில்லை என குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தொடர்ச்சி P2



யாழ்ப்பாணத்தில்...

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு

### ஒக். 1 வரை நீடிப்பு

# ஊரடங்கா?

**தாங்களும் கடைகளை திறப்போம் என இதர வர்த்தகர்கள் கூறியுள்ளனர்**

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி அதிகாலை 4 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக்காலை கூடிய கொவிட்-19 தொற்றொழிப்பின் செயலணி எடுத்தது.

தொடர்ச்சி P2



நுவரெலியாவில்...

# மது விலக்கு இல்லை



மதுபானசாலைகள் மற்றும் பியர் போத்தல் மற்றும் கேன்களை விற்பனை செய்யும் கடைகளை நேற்று (17) முதல் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. எனினும், செப்டெம்பர் 21ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் ஒக்டோபர் 1 ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

# பிள்ளைகளுக்கு ஃபைசர் மாத்திரம் செலுத்தவும்



**ஜனாதிபதி பணிப்பு: வைத்தியசாலைகளில் வைத்து செலுத்துமாறு அறிவுரை**

எதிர்வரும் 21ஆம் திகதியுடன் நீக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், ஒக்டோபர் 1ஆம்திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று (17) முற்பகல் வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கொவிட்-19 தொற்றொழிப்புச் செயலணியின் வாராந்த கூட்டத்தின் போதே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஆபரணத்தை லொஹான் கொள்ளையிடவில்லை

**விமல் விளக்கம்: பதவி விலகியமை முன்னுதாரணமாம்**



இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அவரால் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு பொறுப்பை ஏற்று பதவி விலகியுள்ளமையானது நாட்டுக்கு முன்னுதாரணமான செயல் எனத் தெரிவித்துள்ள கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச, தவறொன்றை இழைப்பதை விட, அந்தத் தவறுக்கு மன்னிப்புக் கோரி பதவி விலகியமையானது சிறந்த பண்பு என்றார்.

தொடர்ச்சி P2

# அச்சம் தவிர்

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என பாதுகாப்பு செயலாளர், ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# இருநாள் அமர்வு

அடுத்த வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வுகளை செப்டெம்பர் 21,22ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்த பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் நேற்று (17) தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.



## பாக்– நியூஸிலாந்து போட்டியை

# ஓரிரு நிமிடத்தில் இரத்து செய்தது நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கும் நியூசிலாந்துக்கும் இடையில் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ‘மலசல கூட கைக்குண்டு’ அமைச்சரின் வீட்டில் இருந்தது

**ரவைகளை அள்ளியவர் மாஹவையில் சிக்கினார்**

நாரஹேன்பிட்டியவில் உள்ள தனியார் வைத்தியசாலையின் முதலாவது மாடியில், மலசலக்கூடத்தில் இருந்து எடுக்கப்பட்ட கைக்குண்டு, அமைச்சரின் வீடொன்றில் இருந்து எடுக்கப்பட்டது என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



# காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன் போராட்டம்

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாக சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் மரணத்துக்கு நீதி கோரி, உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாக வீதியோரமாக நேற்று (17) வியாழக்கிழமை சுயநினைவற்றிருந்த இளைஞனை மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்தபோது, இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கீரிமலை, நல்லிணக்கபுரத்தை சேர்ந்த ம. ஜெனுசன் (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அந்நிலையில், குறித்த இளைஞன், குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் எனும் சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, குறித்த இளைஞன் நேற்றைய தினம் மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டிருந்த வேளை, அங்கு சிலர் அவருடன் முரண்பட்டதாகவும், அவர்களே இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கொலைச் சம்பவம் குறித்து துரித விசாரணைகளை முன்னெடுத்து, கொலையாளிகளை கைது செய்யக்கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

–எம். றொசாந்த்

# ஒன்லைனை அச்சுறுத்தினால் 119க்கு முறையிடவும்



வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்குப்பற்றாமல் இணையவழி ஊடாக கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுமாயின் அவை தொடர்பில், உடனடியாக முறையிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# யாருக்கு ஃபைசர்



மருத்துவ பரிந்துரைக்கமைய 15 வயதுக்கும் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு ஃபைசர் தடுப்பூசி செலுத்துவதற்கு தீர்மானித்துள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தொழிலாளர் சங்கத்தின் பொறுப்புகள்

# ஹரீன், வடிவேலிடம் மீண்டும் ஒப்படைப்பு



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஹரின் பெர்னாண்டோவும் பொதுச் செயலாளராக தானும் தொடர்ந்தும் செயற்பட முடியும் என, சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என, பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# கொடிகாமத்தில் இரண்டு கிளைமோர்கள் மீட்பு

■ றொமேஷ் மதுசங்க

யாழ்ப்பாணம், கொடிகாமம் குடமியன் பிரதேசத்தில், கொண்டுவந்து போடப்பட்டதாகக் கூறப்படும் அதிசக்திவாய்ந்த கிளைமோர் குண்டுகள் இரண்டு செப்டெம்பர் 16ஆம் திகதியன்று கைப்பற்றப்பட்டன.

தொடர்ச்சி P2



# இஷாலினி விவகாரம்: மனைவி, மாமாவுக்கு பிணை

**ரிஷாட்டின் விளக்கமறியல் நீடிப்பு**



கொழும்பிலுள்ள ரிஷாட் பதியூதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய தலவாக்கலை-டயகமவைச் சேர்ந்த 16 வயதான இஷாலியின் மரணம் தொடர்பிலான வழக்கு நேற்று (17) விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒக். 1 வரை நீடிப்பு ஊரடங்கா?

இந்நிலையில், நேற்றுமாலை அறிவிப்பொன்றை விடுத்த கலால் வரி திணைக்களம் மதுபானசாலைகளை திறந்துவிட்டது. இதனால், ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் வாரத்துக்கு வாரம் நீடிக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், அதனால் கிடைத்த பயன்கள் யாவும் காற்றோரு காற்றாக பறந்து விட்டன என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மதுபானசாலைகள் திறக்கப்பட்டதை கேள்வியுற்ற மக்களில் பெரும்பாலானவர்கள் நகரங்களை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர். அங்கு நீண்டவரிசைகளிலும் நின்றனர். மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மதுபானங்களை திறந்ததன் ஊடாக, சகல கட்டுப்பாடுகளும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டன.

நகரங்களில் இருக்கும் ஏனைய வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர் வர்த்தகர்கள் "இது என்ன? அத்தியாவசிய சேவை" என கேள்வியெழுப்பியுள்ளனர். தாங்களும் கடைக்களை திறக்கபோகிறோம் என பகிரங்கமாக குரல் கொடுத்தும் உள்ளனர்.

மதுபானசாலைகளை திறந்ததன் ஊடாக, ஏற்கெனவே நாடு மூடப்பட்டு ருந்ததைப் போல, இன்னும் சில மாதங்களுக்கு மூடியே இருக்கவேண்டிய நிலைமை ஏற்படுமென பொதுமக்களில் பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# மது விலக்கு இல்லை



மதுபானசாலைகள் திறக்கப்பட்ட ஓரிரு மணிநேரங்களுக்குள் நீண்ட வரிசைகள் மக்கள் காத்துக்கொண்டு நின்றிருந்தமையை அவதானிக்க முடிகின்றது. அத்துடன், பொலிஸாருக்கும் ஆங்காங்கே பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

# அச்சம் தவிர்

விமான நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த போலி மின்னஞ்சல் தகவல் காரணமாக பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் சட்டத்தை பாதுகாக்கும் சேவைகள் தொடர்ந்தும் சீராக முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# மது கொத்தணி அபாயம்?

ஆகையால், கொரோனா வைரஸ் கொத்தணிகளுக்கு அப்பால், "மது கொத்தணி" உருவாகுவதற்கு அதிகப்படியான வாய்ப்புகள் உள்ளன. மதுபான சாலைகளுக்கு சென்று நீண்ட வரிசைகளில் நிற்போர், ஒரு மீற்றர் இடைவெளியை பேணுவதில்லை. எனினும், அங்கு கடமையில் இருக்கும் பொலிஸார், இருவருக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளியை பேணுவதற்கான கட்டளைகளை இட்டுக்கொண்டிருக்கின்றனர்.

# பிள்ளைகளுக்கு ஃபைசர் மாத்திரம் ஏற்றவும்

பிள்ளைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம் தொடர்பில் பதிலளித்த சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன, "நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள 12 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுமாறு, விசேட சுகாதார நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது" என்றார்.

அத்துடன், "சிகிச்சையக (கிளினிக்) விசேட வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பின் கீழ், பெற்றோர்களின் அனுமதியுடன், அந்தச் சிகிச்சையகங்களுக்குள் வைத்து மாத்திரம் மேற்படி சிறுவர்களுக்கான தடுப்பூசியை ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

12 - 15 வயதுக்கிடைப்பட்ட ஆரோக்கியமான சிறுவர்களுக்குரிய தடுப்பூசி ஏற்றல் தொடர்பில், விசேட வைத்திய குழு பதிலளிக்கையில், உலகின் ஏனைய நாடுகளில்கூட, அதற்கான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் இருப்பினும், 15 - 19 வயதுக்கிடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலுக்குரிய பரிந்துரை கிடைக்கப்பெற்றுள்ளது என்றது.

இதன்படி, நாட்டிலுள்ள 15 - 19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்தி முடிக்குமாறும் வைத்தியசாலைகளுக்குள் வைத்து மாத்திரம் அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

விசேட வைத்திய குழுவின் பரிந்துரைக்கமைய, அனைத்துச் சிறுவர்களுக்கும், ஃபைசர் தடுப்பூசியை மாத்திரம் ஏற்றுமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

நாட்டு மக்களுக்கு ஏற்றப்படும் தடுப்பூசிகள் அனைத்தும் தரம்வாய்ந்தவை என்றும் எடுத்துரைத்த விசேட வைத்திய நிபுணர்கள் அதனால், விசேட தடுப்பூசியொன்று கிடைக்கும் வரை காத்திருக்காது, அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வர வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைகளில், கொரோனா சிகிச்சை நிலையங்களை உருவாக்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், காணிப் பதிவு அலுவலகம் போன்ற அத்தியாவசியச் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் நிறுவனங்களின் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்க அந்நிறுவனங்களின் தலைவர்கள், உரிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# ஆபரணத்தை லொஹான் கொள்ளையிடவில்லை

எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தில் இதற்கு முன்னர், இவ்வாறான எவரும் தவறு செய்த எவரும் அவர்களாகவே முன்வந்து இவ்வாறு முன்மாதியாக செயற்படவில்லை என்றும் எனவே லொஹான் ரத்வத்தயின் செயற்பாடு, முன்மாதிரியான செயற்பாடு இடம்பெறவில்லை.

இதன்போது, அவர் இராஜாங்க அமைச்சில் ஒன்றை மாத்திரமே துறந்துள்ளார் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், , லொஹான் ரத்வத்த தங்க ஆபரண கொள்ளைக்குச் சென்றிருந்தால், ஆபரணங்கள் கைத்தொழில் அமைச்சிலிருந்தும் பதவி விலகியிருப்பார் என்றார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என பேராயர் உள்ளிட்டவர்கள் கூறிவரும் நிலையில், அவ்வாறு யார் கைதுசெய்யப்படாமல் மிகுதியாகவுள்ளனர் என பகிரங்கமாக தெரவிக்க வேண்டும் என்றார்.

பேராயர் மற்றும் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிர்த்த ஞாயிறு தொடர்பான வழக்கு விசாரணையில் காலதாமதம் ஏற்படுவதாக தோன்றலாம். அது இயல்பான விடயம். ஆனால் சட்டம் செயற்படுவதற்கு அமைய தான் சகல விடயங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. என்றார்.

# யாருக்கு ஃபைசர்

இதுதொடர்பில், ஜனாதிபதி தலைமையில் நேற்று (17) நடைபெற்ற கொவிட்-19 தொற்றொழிப்பு செயலணியின் விரிவாக கலந்துரையாடப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹரீன், வடிவேலிடம் மீண்டும் ஒப்படைப்பு

மலையக மக்களுக்காக, சேவை நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினுடைய செயற்பாடுகளை இடை நிறுத்தும் நோக்குடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க மற்றும் ஆர். யோகராஜன் ஆகியோர் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இதற்கமைய, ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி அன்று மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, பத்து நாள்கள் தடையுத்தரவு ஒன்றினை பெற்றிருந்தனர்.

அதனை ஆட்சேபித்து தம்மால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கவனத்தில் கொண்டு, நேற்று முன்தினம் (16) தடைகள் எதுவும் இன்றி இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகளை, தொடர்ந்தும் தங்களால் முன்னெடுக்க முடியும் உத்தரவிட்டுள்ளது.

இது ஒட்டுமொத்த பெருந்தோட்ட மலையக மக்களுக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் வெற்றி என தெரிவித்த அவர், தொடர்ந்தும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு தொழில் நலனுக்காக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் செயற்படும் என்றார்.

# கொடிகாமத்தில் இரண்டு கிளைமோர்கள் மீட்பு

அந்தப் பிரதேசத்திலுள்ள கோவிலுக்கு அண்மையிலுள்ள பனைமரத்துக்கு கீழிருந்தே இவ்விரு கிளைமோர் குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த கொடிகாமம் பொலிஸார், பிரதேசவாசிகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இவை மீட்கப்பட்டன என்றார்.

அதிலொரு கிளைமோர் குண்டு 10 கிலோகிராம் நிறைகொண்டது என்றும் மற்றைய கிளைமோர் குண்டு 15 கிலோகிராம் நிறையைக் கொண்டது.

அவ்விரு கிளைமோர் குண்டுகளும் யாராவது அவ்விடத்துக்கு கொண்டுவந்து போட்டிருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸார், அவைத்தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

# எண்ணிக்கையை குறைக்கும் விசம பணிகள் முன்னெடுப்பு

### பத்மநாதன் கருணாவதி குற்றச்சாட்டு



மு.தமிழ்ச்செல்வன்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையும் திட்டமிட்ட இன அழிப்பின் ஓர் அங்கம். வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அதன் கனதியை நீர்த்துப்போகச்செய்யவே எண்ணிக்கையைக் குறைக்கும் விசமத் திட்டத்தில் ஈடுபடுகிறார்.

இதை மனித உரிமை உயர்ஸ்தானிகர் ஏற்றுக்கொள்ள கூடாது என வலிந்து காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பு உயர்ஸ்தானிருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 2000-2021 வரையான இருபது வருட காலப்பகுதியில் ஏறத்தாழ ஆறாயிரம் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய விவரக் கோவையைத் தற்போது ஒப்புநோக்கி உறுதிப்படுத்தி வெளியிட இருப்பதாக இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், ஜெனீவா ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகரின் வாய் மூல அறிக்கைக்கு முன்பதாகத் தகவல் வழங்கியிருக்கிறார்.

அதுவே குறைந்த ஓர் எண்ணிக்கையைக் கூட நான்காயிரத்துக்கும் அல்லது அதற்கும் குறைவாகக்காட்ட முனையும் ஒரு கண்துடைப்பு நாடகத்தை அவர் ஆரம்பித்திருப்பதை எவ்வாறு மனித உரிமை உயர்ஸ்தானிகர் ஆமோதிக்கமுடியும் என்று 2021 செப்மெம்பர் 15ஆம் திகதி புதன்கிழமை காட்டமான திறந்த மடல் ஒன்றை வலிந்து காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அமைப்பு உயர்ஸ்தானிருக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஆங்கில மொழியில் இரண்டு பக்கங்களில் வரையப்பட்ட அந்த மடலில், மேலும் இலங்கை அரசின் பல திட்டமிட்ட இன அழிப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் பல விடயங்கள் கோரிக்கையாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன.

# 'மலசல கூட கைக்குண்டு' அமைச்சரின் வீட்டில்....

கொழும்பு-07 விஜேராம மாவத்தையில் உள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் இலாச்சியில் இருந்தே அவை எடுக்கப்பட்டுள்ளன.

கைக்குண்டு மீட்கப்பட்டது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள திருகோணமலை உப்புவேலி பிரதேசத்தை சேர்ந்தவரினால் வழங்கப்பட்ட வாக்குமூலத்திலே யே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டட நிர்மாணப்பணிகளில் பணியாற்றும் மேற்படி சந்தேகநபர், இன்றைக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு திருத்தப் பணிகளுக்காக வந்துள்ளார்.

அங்குள்ள அறையொன்றின் மேசையின் இலாச்சியில் இருந்து கைக்குண்டு மற்றும் தோட்டாக்கள் சிலவற்றை மீட்டுள்ளார்.

கைக்குண்டை இந்த சந்தேகநபர் வைத்துக்கொண்டதுடன், தோட்டாக்களை அவருடன் இருந்த மற்றுமொருவர் எடுத்துச் சென்றுள்ளார்.

தோட்டாக்களை எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் நபர் வசிப்பதாகக் கூறப்பட்ட மஹவ மற்றும் வெலிக்கந்த பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் (16) சென்றிருந்த விசேட விசாரணைப் பிரிவினர் அங்கு சோதனை நடத்தியதுடன், அவரை, நேற்று (17) கைது செய்யப்பட்டுள்ளார் என கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

கைக்குண்டு மற்றும் தோட்டாக்கள் மீட்கப்பட்ட அந்த வீட்டில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் தற்போது வசித்துவருகின்றார். எனினும், தற்போதைய அமைச்சர் அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு வருகைதருவதற்கு முன்னரே, கைக்குண்டு மற்றும் தோட்டக்களை தான் எடுத்ததாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஓரிரு நிமிடத்தில் இரத்து செய்தது நியூசிலாந்து

பாதுகாப்பு காரணங்களைக் கொண்டே இந்தத் தொடர் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது. இறுதி நேரத்தில் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டதை இட்டு மனவருத்தம் அடைவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

முதல் ஒருநாள் போட்டி தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை நியூசிலாந்து ரத்து செய்தது.

மூன்று ஒருநாள் ஐந்து டி-20 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரின் முதல் போட்டி பாகிஸ்தான் ராவல்பிண்டியில் நேற்று (17) பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவிருந்தது. போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு இரண்டொரு நிமிடத்திலேயே மேற்கண்ட அறிவிப்பை நியூசிலாந்து விடுத்தது. அவ்வணி, தனது நாட்டுக்கும் புறப்பட்டது.

# ஒன்லைனை அச்சுறுத்தினால் 119க்கு முறையிடவும்

அவ்வாறு யாராவது அச்சுறுத்தல்களை விடுப்பார்களாயின் 118 அல்லது 119 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யுமாறும் அரசாங்கத் தகவல்கள் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஷாலினி விவகாரம்: மனைவி, மாமாவுக்கு பிணை

இந்த வழக்கில் 5ஆவது சந்தேகநபராக குறிப்பிடப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீன், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவருடைய விளக்கமறியல் ஒக்டோபர் 1ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எனினும், ரிஷாட் பதியூதீனின் மனைவி கிதார் முகமது சியாப்தீன் ஆயிஷா மற்றும் அவரது தந்தை அலி இப்ராகிம் சைபு கிதர் முகமது சிஹாப்தீன் ஆகியோரை தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலைச் செய்த கொழும்பு மேலதிக நிதவான் ரஜீந்திரா ஜயசூரிய, வழக்கை ஒக்டோபர் 1ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### “காதி நீதிமன்றங்களை

# ஒழிப்பது நோக்கமல்ல”

## ‘ஒரு கேள்விக்கு ஒரு பதிலில்’ நீதியமைச்சர் அலி சப்ரி விளக்கம்

அஷ்ரப் ஏ சமத்

ஒருத்தர், வேறு ஒரு திருமணம் முடிப்பது என்றால், ஏற்கெனவே முடித்த பெண்ணுக்கு எவ்வித கொடுப்பனவையும் கொடுக்காமல், விவகரத்துப் பெற்று, இலேசாக இன்னொரு திருமணம் முடிப்பதைத் தடுத்தல்; அதற்காக, ஒரு சரியான சட்டத்தினை ஏற்படுத்தல்; இந்தப் பெண்கள், கடந்த காலங்களில் கஷ்டப்படுவது நமது கண்களுக்குத் தெரியவில்லையா? இதிலேயே நான் மாற்றம் கொண்டுவருவதற்காக முனைகின்றேன். அதில் காதி நீதிமன்றத்திலும் சில மாற்றங்கள் கொண்டுவருதல் வேண்டும்; நான் ஒருபோதும், காதி நீதிமன்ற முறைமையை ஒழிக்க வேண்டும் என எண்ணியது கூட இல்லை. பலர் பலமாதிரியாக, என்னைப் பற்றி பலதையும் பேசுகின்றார்கள் என மனந்திறந்தார் நீதியமைச்சர் அலி சப்ரி. அவரது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் வைத்து, முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்து சட்டம் பற்றி கேட்கப்பட்ட ஒரேயொரு கேள்விக்கு அளித்த ஒரேயொரு பதில்:

கேள்வி: நீங்கள் நீதி அமைச்சராக வந்ததன் பின்னர், அமைச்சரவைப் பத்திரம் தயாரித்து, முஸ்லிம் விவாகம் மற்றும் விவகாரத்து சட்டத்தினை, முற்றாக மாற்றியமைப்பதாகச் சொல்லியிருந்தீர்கள். இவ்விடயம் பற்றி, முஸ்லிம்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புகளும் விமர்சனங்களும் எழுந்துள்ளன. இவை பற்றி உங்கள் கருத்து என்ன ?

பதில்: முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்து சட்டத்தில் பல மாற்றங்கள் கொண்டுவருதல் வேண்டும் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. இவ் விடயம், எங்களது சமூகத்தில் இருந்தே நீண்டகாலமாக சொல்லப்பட்டு வந்ததாகும். அதன் பின்னர் நீதியமைச்சர் பலர் பதவி வகித்த காலத்தில், இத் துறை சார்ந்தவர்களை குழுவாக அமைத்து, பல அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வந்துள்ளன.

1956இல் இருந்த காலத்திலிருந்தே முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்து சட்டம் மாற்றம் பற்றி திரு. கனகரத்தினம் கியு. சி, கலாநிதி பாருக் குழு, கலாநிதி சகாப்தீன் குழு, உயர் நீதிமன்ற நீதியரசர் கலாநிதி சலீம் மஹ்சூப் குழு எனப் பல்வேறு முஸ்லிம் சட்ட அறிஞர்களது அறிக்கைகள் கடந்த 70 வருடகாலமாக நீதி அமைச்சில் சமர்ப்பிக்கப்பட்டு வந்துள்ளன. இறுதியாக ஓய்வு பெற்ற நீதியரசர் சலிம் மர்சூப் அவர்களின் அறிக்கையும் நீதியமைச்சில் உள்ளது.

தற்காலத்தில் சவுதி அரேபியாவில் கூட 18 வயதிற்கு குறைந்த வயதில் திருமணம் முடிக்க முடியாது. அதற்கு காரணம் வங்கி ஒன்றில் கூட, நடைமுறைக் கணக்கொண்றை செயற்படுத்தல் வேண்டுமென்றால் 18 வயது கட்டாயமாகும். ஒரு சொத்துரிமையை உறுதிப்படுத்தி அதனை மாற்றுவதற்கும் நீதிமன்றம் சென்று அனுமதி பெறப்படல் வேண்டும். இதனால் தான், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்திலும் பல மாற்றங்களை செய்தல் வேண்டும்.

எமது நாட்டில் உள்ள காழி நீதிமன்றங்களின் படி, எமது சமூகத்தில் உள்ள பெண்களுக்கு கூடிய கல்வித் தகைமைகள் இருந்தாலும், அவர்கள் ஒருபோதும் பெண் காழி நீதிபதியாக வரமுடியாது. ஆனால், இன்று சிங்கப்பூரில் ஒரு முஸ்லிம் பெண் ஜனாதிபதி; மலேசியா, பாகிஸ்தான் நாடுகளில் பிரதம நீதியரசராக முஸ்லிம் பெண்கள் பதவி வகிக்கின்றனர்.

நமது சமூகத்தில் நூற்றுக்கு 65 சதவீதமான முஸ்லிம் பெண்கள் பல்கலைக்கழக பட்டதாரிகளாக உள்ளனர். அப்படியான பெண்களுக்கு கூட, தனது வாழ்வில் ஒரே ஒரு முறை நடைபெறுகின்ற விவாகச் சான்றிதழில் கூட, கையொழுத்திட்டு தனது திருமணத்தினை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. பெண்கள் ஏன் காதி நிதிபதியாக வரமுடியாது? எனக் கேட்கின்றேன்.

காதி நீதிபதியால் விவாகரத்து பெற்ற ஒரு பெண், தனது பிள்ளைகளுக்கு கணவரால் பராமரிப்புச் செலவு பெறாவிட்டால், காதி நீதிபதியின் கடிதம் எடுத்துக்கொண்டு சிவில் நீதிமன்றதுக்கு போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பிள்ளைச் செலவு கட்டண விடயத்தில காதி நீதிபதியால் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாமல் அவர்களுக்கு உள்ளது.

> **உலகத்தில் எவ்வளவோ மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. எமது முஸ்லிம் பெண்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்குதல் வேண்டும்**

ஆகவேதான், முஸ்லிம் விவாகம் விவாகரத்துச் சட்ட காழி நீதிமுறையில் சில மாற்றங்கள் கொண்டு வருதல் வேண்டும். நான் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம், ஓர் அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தேன். அதில் திருமண வயது 18 வயதாக இருத்தல் வேண்டும். அதனை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். முஸ்லிம் பெண்களும் காதி நீதிபதியாக வரமுடியும். தாபரிப்பு செலவுகளுக்காக, காதி நீதிபதியிடம் கடிதம் எடுத்துக் கொண்டு மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேரடியாக செல்ல வேண்டும்.

> **முஸ்லிம் விவாகம் விவாகரத்துச் சட்ட காழி நீதிமுறையில் மாற்றங்கள் கொண்டு வருதல் வேண்டும்**

ஒருத்தர், வேறு ஒரு திருமணம் முடிப்பது என்றால், ஏற்கெனவே முடித்த பெண்ணுக்கு எவ்வித கொடுப்பனவையும் கொடுக்காமல் விவகரத்து பெற்று, இலேசாக இன்னொரு திருமணம் முடிப்பதைத் தடுத்தல் ஆகும். அதற்காக ஒரு சரியான சட்டத்தினை ஏற்படுத்தல் நியாயம் இல்லையா?

இந்தப் பெண்கள், கடந்த காலங்களில் கஷ்டப்படுவதை நமது கண்களுக்குத் தெரியவில்லையா? இதனையே நான் மாற்றம் கொண்டு வருவதற்காக முனைகின்றேன். அதில் காதி நீதிமன்றத்திலும் சில மாற்றங்கள் கொண்டுவருதல் வேண்டும். நான் ஒருபோதும் காதி நீதிமன்ற முறைமையை ஒழிக்க வேண்டும் என நினைத்ததுகூட இல்லை. பலரும் பலமாதிரியாக, என்னைப் பற்றி பலதையும் பேசுகின்றார்கள்.

இவர்கள் என்ன சொன்னாலும் முஸ்லிம் விவாகரத்து விவாக சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதில் நான் நிறுத்தப்போவதில்லை. நான் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் கண்டிப்பாக கூறியது. இச் சட்டத்தில் சில மாற்றங்கள் கொண்டு வருதல் வேண்டும். *conditionally polygamy* மாற்றம் செய்தல் வேண்டும்.

உங்களுக்குத் தெரியும் இப்போது ஆட்சியில் இருக்கின்ற அரசினது விஞ்ஞாபனத்தில் ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’. அதில் அவர்கள் கூறுவதெல்லாம் முடியுமான அளவு அதனை அமல்படுத்தல் வேண்டும் எனக் கூறினார்கள். அவர்கள் அமைச்சரவையில் கூறினார்கள், தற்பொழுது இருக்கும் முஸ்லிம் சட்டம் அமலில் இருப்பதற்கு பராவயில்லை; ஆனால், சில நிவர்த்தி செய்யக்கூடிய பிள்ளைச் செலவு. பெண்களது தாபரிப்பு போன்ற பிரச்சினைகளான சில அதிகாரஙகளை மாவட்ட நீதிமன்றதுக்கு வழங்குங்கள். எனக் கூறினார்கள். நான் இதற்கு முன் வந்திருக்காவிட்டால், இந்த அரசு ஆட்சிக்கு வந்ததுமே இதனை இலகுவாக இந்தச் சட்டத்தினை மாற்றி, பொதுச் சட்டத்திற்குள் கொண்டு வந்திருப்பார்கள். Simply repeals . Muslim Marriage and Divorce Act is hereby repealed and hereafter General Marriage Law is apply for all parties is respect of religion or races are origin இந்த வசனமூலம் மாற்றியிருப்பார்கள். நான் அதனை தடுத்து முஸ்லிம் சட்டம் பற்றிய ஆலோசனை குழுவொன்றை நியமித்தேன். அதில் காழிமார்களை அழைத்து அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை ஆலோசித்து அப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கே முயற்சிக்கின்றேன்.

தற்பொழுது இரண்டு தடவைகள் காதிகளிடம் போகமால் ஒரே தடவையில் நீதிமன்ற தாபரிப்பு - பராமரிப்பு போகக் கூடிய வகையில் மாற்ற வேண்டும். சிறிய பிள்ளைகளது பராமரிப்பு பிரச்சினையும் தீர்த்துவைப்பதில் முயற்சியிலும் எங்களது சட்டத்தினையும் காப்பாற்றுவதற்கு நான் போராடி வருகின்றேன்.

இதைப்பற்றி நான் அறிந்து, வரைபொன்றினை தயாரிப்பதற்கு ஒரு குழு வொன்றினை முஸ்லிம் சமய திணைக்களத்தின் கீழ் உள்ள வக்பு சபையின் தலைவர் சட்டத்தரனி சப்றி தலைமையிலும், முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் அஸ்ரப் , அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் கொழும்பு பல்கலைக்கழகத்தின், சட்டத்துறை கலாநிதி ஹக்கீம் உட்பட சில உறுப்பினர்களை நியமித்தேன். அவர்களுடன் இணைந்து இந்த நாட்டில் கஷ்டப்படும் பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்காலத்தில் எவ்வாறு பாதுகாக்க முடியும். அதனையே இந்தச் சட்டத்தின் ஊடாக சில மாற்றங்கள் அறியப்பட்டன.

எம் மத்தியிலும் மாற்றங்கள் வரல் வேண்டும். இல்லாவிட்டால் அல்லஹ் கூறுகின்றான், எந்த சமுதாயம் தன் தலைவிதிலைய மாற்றிக் கொள்ளாதவரை; நான் அதனை ஒருபோதும் மாற்ற மாட்டேன். ஆகவே தான், அதற்கான காலம் நம்மிடம் வந்துள்ளது உலகத்தில் எவ்வளவோ மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. எமது முஸ்லிம் பெண்களுக்கு உரிய அந்தஸ்தை நாம் வழங்குதல் வேண்டும் என நீதியமைச்சா அலி சப்றி தெரிவித்தார்.



# எங்கே இந்தக் கிராமங்கள்?

**வெடிவைத்த கல்லுக்கு நடந்ததென்ன?**
**தமது பாரம்பரிய கிராமங்களில், மக்கள் குடியேறாமைக்கு காரணம் என்ன?**
**இவை, அழிவடைந்து செல்லும் நிலை ஏன் வந்தது?**

க. அகரன்





ஓர் இனம் வாழ்ததற்கான அடையாளங்களாக, பல்வேறு சான்று பொருட்கள் அந்தப் பிரதேசங்களில் காணப்படும். அவற்றை வைத்தே வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையின் வடபால், வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில், ஒரு கிராமம், மக்கள் இன்றி அழிவடைந்து செல்கின்றது என்றால், நம்பித்தான் ஆக வேண்டும்.

பழம்பெரும் கிராமமமான ‘வெடிவைத்தகல்’ என்ற செழிப்புமிகு, எல்லையோர கிராமமே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையை சந்தித்துள்ளது.

1985 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர், சுமார் 45 குடும்பங்கள் வாழ்ந்த இக் கிராமம், செல்வச்செழிப்புடன் காணப்பட்ட நிலையில், அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளால், மக்கள் சிறுகச் சிறுக வெளியேறி நகர்ப்புறங்களை நோக்கி சென்றுவிட, அக்கிராமம் வனாந்தரமாக காணப்படுகின்றது.

ஓமந்தை கிராமத்தில் இருந்து, 24 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இக் கிராமத்தில், தற்போது அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையினால், அக்கிராமத்தை சேர்ந்த மக்கள், மீளக்குடியேற விருப்பம் அற்ற நிலையில் காணப்படுகின்றனர் என, அக்கிராமத்துக்கு அயலில் உள்ள கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், அப்பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெற்றபோது, மக்கள் மீள வருவார்கள் என்ற அவாவோடு அரச அதிகாரிகளின் பரிந்துரையினால், இந்திய அரசின் நிதியுதவியுடன் பாடசாலையொன்று கட்டப்பட்டு, இன்று அது நெல் காய வைக்கும் இடமாக மாறிக் காணப்படுகின்றது.

சிதைவடைந்த வீடுகள், சீரற்ற வீதிகள், எப்போது யானை வரும் என தெரியாத வனாந்தரம் என்ற ஓர் அழிந்த கிராமத்துக்கு அருகாமையில் உள்ள கிராம மக்களும், தமது அன்றாட கருமங்களை இத்தகைய ஆபத்துகளுக்கு மத்தியில் அச்சத்துடன் கழிக்க வேண்டியிருப்பதால், அவர்களும் தமது பாரம்பரிய கிராமங்களை விட்டு வெளியேறும் நிலை காணப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர், 35 குடும்பங்கள் வாழ்ந்த கோவில் புளியங்குளம் கிராமத்தில் தற்போது ஒன்பது குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம், வெடிவைத்தகல் கிராமத்தின் பாதிப்பாகும்.

எனவே, இந்தப் பாரம்பரிய கிராமங்களில், மக்கள் வாழ்வதற்கு ஏதுவான நிலைமைகள் தொடர்பில், சிந்திக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து, 11 வருடங்கள் கடந்த நிலையில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி என பெருமளவு நிதியை அரசாங்கம் செலவு செய்துள்ளது. எனினும் அவை சீரான முறையில் பயன்படுத்தப்பாமை பல கிராமங்கள் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றமையை தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இந்நிலை வடக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் வவுனியாவில் அதிகம் என்றே கூறலாம். குறிப்பாக, வீமன்கல், வெடிவைத்தகல், புதுவிளாங்குளம் என பல கிராமங்களைக் கூறலாம்.

இவ்வாறு இக்கிராமங்களில் மக்கள் குடியேறாமைக்கு காரணம் என்ன....?. இவை அழிவடைந்து செல்லும் நிலை ஏன் வந்தது என்பன தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது.

> **கிராமங்களில், வாழ்வதற்கு ஏதுவான நிலைமைகள் வேண்டும்**

இவ்வாறான நிலைமைக்கு வெறுமனே அரசாங்கத்தினை மாத்திரம் குற்றம்சாட்டிவிட்டு மக்கள் தப்பித்துக்கொள்ள முடியுமா எனவும் பார்க்க வேண்டும். ஏனெனில் யுத்த காலத்தில் வெளியேறிய மக்கள் நகர்ப்புறங்களில் வசதிவாய்ப்புகளுடன் வாழ்வதன் காரணமாக மீளவும் தமது கிராமத்திற்கு செல்வதற்கு பின்னடிக்கும் நிலை காணப்படுகின்றது.

அங்குள்ள வயல் நிலங்களில் செய்கை பண்ண மட்டுமே செல்லும் மக்கள் பயனைப்பெற்றுவிட்டு மீள நகரைநோக்கி திரும்பி விடுகின்றமை கிராமத்தின் வளர்ச்சியில் பெரும் பாதிப்பே.

எல்லையோர கிராமமாக இது காணப்படுகின்றமையால் அயலில் உள்ள சகோதர இனத்தவர்கள் அப்பகுதியில் காணிகளை அபகரிக்க திட்டமிட்டும் வருகின்றனர். மக்கள் தமது கிராமத்தில் குடியேறாத நிலையில் தமது காணிகள் பறிபோகின்றது எனக் கூக்குரல் இடுவதால் எந்த பலனும் இல்லை என தெரிந்த போதிலும் புதிய சந்ததி அக்கிராமங்களில் சென்று குடியேற தயாராக இல்லை என்பதே யதார்த்தம்.

இவ்வாறான ஓர் நிலைமையையே வவுனியா புதுவிளாங்குளம் என்ற கிராமமும் சந்தித்து வருகின்றது.

> **சகோதர இனத்தவர்கள், காணிகளை அபகரிக்க திட்டம் வருகின்றனர்**

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இக்கிராமத்தில் ஒரு பரம்பரைக்குரிய 25 குடும்பங்கள் ஆரம்பத்தில் வாழ்ந்து வந்தனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க புதூர் கோவிலை அண்டியதாக உள்ள இக் கிராமம் விவசாயப் பிரதேசமாகும். முன்னர் பாடசாலை, சிவன் கோவில், சனசமூகநிலையம், அழகான கல்வீடுகள், விளைச்சல் தரும் வயல்கள் என்பவற்றைக் கொண்டு கம்பீரமாக காட்சியளித்த இந்தக் கிராமம் தற்போது பற்றைக்காடாகவும், போரின் சாட்சியாகவும் கண்முன்னே நிற்கின்றது.

சேதமடைந்த சிவன் கோவிலும், சிதைவடைந்த கட்டடம் ஒன்றின் இடிபாடும் மட்டுமே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஒரே சாட்சி. ஏனைய கட்டடங்களின் அத்திவாரங்களை கூட தேடி கண்டுபிடிக்க முடியாத நிலையில் போரின் அவலத்தை இப்பிரதேசம் நேரடியாக சந்தித்துள்ளது.

இப்பகுதியில் குடியிருந்த மக்கள் 1997 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக, இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களை நோக்கி நகர்ந்தனர்.

அவர்களது வாழ்விடங்கள் பற்றைக்காடுகளாக மாறியிருந்ததுடன், அப்பகுதியில் மக்கள் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் அங்கு சென்று குடியேறுவதை தவிர்த்த இக் கிராம மக்கள் தற்போது கனகராயன்குளம், மன்னகுளம், வவுனியா உள்ளிட்ட பல பகுதிகளில் வேறு காணிகளைப் பெற்றும், உறவினர்கள், நண்பர்கள் காணிகளிலும் வசித்து வருகின்றனர். இதன் காரணமாக இந்தக் கிராமம் தற்போது அழிந்து போகும் நிலையில் உள்ளது.

தரம் 5 வரை இருந்த பாடசாலை கூட தற்போது இருந்த இடம் தெரியாது இருக்கின்றது. மேலும், இப் பகுதிக்கான போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலை காணப்படுவதுடன் வீதிகள் கூட சீராக இல்லை. இதனால் தமது பிள்ளைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் என்பவற்றை கவனத்தில் கொண்டு, இக் கிராமத்தில் மக்கள் சென்று குடியேறுவதை தவிர்த்து வருகின்றனர்.

தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுவதாக குரல் கொடுக்கும் பிரதிநிதிகள் கூட, அழிவடைந்து செல்லும் கிராமங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் அழிவடையும் தமிழ் கிராமங்களின் பட்டியல் நீண்டே செல்கின்றது.

நாட்டில் பல்வேறு அபிவிருத்திகள் இடம்பெறுகின்ற போதும் அவை சீராக பங்கிடப்படாமையும், குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டும் அபிவிருத்தி திட்டங்களை ஒதுக்குவதன் மூலமும் இன்று பல பகுதிகளில் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி கஷ்டப்படும் நிலை உருவாகியுள்ளதுடன், அந்தக் கிராமங்களை கைவிட்டுச் செல்லும் நிலையும் உருவாகி வருகிறது.

அந்த வரிசையிலேயே வெடிவைத்தகல், புதுவிளாங்குளம் கிராமங்கள் உள்ளன. எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி அபிவிருத்திகளையும் வளங்களையும் சீராகப் பங்கீடு செய்து, அழிவடையும் தமிழ் கிராமங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

# மர்மங்களுடன் மரணித்த 'ரபியா'





இளங்கோ பாரதி
ilangobharathy727@gmail.com

பெண்ணைப் போற்றுகின்ற பெருமை கொண்டது பாரத நாடு. பல மொழிகள், பன்மைத்துவ கலாசார பாரம்பரியங்களைக் கொண்டு விளங்கும் அந்நாட்டில், பெண்ணைச் சிதைக்கின்ற சம்பவங்களும் அவ்வப்போது இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்தியாவில் பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள் நிகழ்த்தப்பட்ட பல சந்தர்ப்பங்களைச் செய்திகள் வாயிலாக அறிந்திருக்கிறோம். இக்குற்றங்கள் தொடர்பாகவும் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் தொடர்பாகவும், நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

சட்டங்கள் எவ்வளவுதான் இறுக்கமானவையாக இருந்தாலும், அவற்றிற்கு வழங்கப்படும் தண்டனைகள் எவ்வளவுதான் கொடூரமைமானவையாக இருந்தாலும், இப்பாலியல் வன்முறைகள் இன்னும் அகன்ற பாடாக இல்லை.

சமீபத்தில் இந்தியாவின் தலைநகரான புதுடெல்லியில் இடம்பெற்ற ஒரு சம்பவம், மனித நேயம் கொண்ட அனைவரது கண்களிலிருந்தும் கண்ணீரை வரவழைத்து விடும் கொடூரம் நிறைந்தது.

இந்நிலைக்கு ஆளானவர் ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும் சட்டத்தின் காவலர்களாக விளங்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கே, பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உள்ளதென்பது, சமூகத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லி, சங்க விஹார் பகுதியைச் சேர்ந்தவர் ராபியா ஷைஃபி (ஷபியா). 21 வயதான இவர் நான்கு மாதங்களுக்கு முன்புதான், புதுடெல்லி லஜ்பத் நகர் மாவட்ட மாஜிஸ்திரேட் அலுவலகத்தில் சிவில் பாதுகாப்பு அதிகாரியாக பணியில் இணைந்துள்ளார். இந்நிலையில் ஒகஸ்ட் மாதம் 26ஆம் திகதி, பணிக்கு சென்ற ரபியா வீடு திரும்பவில்லை.

சம்பவதினத்தன்று ராபியா வீட்டுக்கு வராததால், குடும்பத்தார் இரவு 10 மணி அளவில், ராபியாவின் அலுவலக நண்பர் ஒருவரைத் தொடர்புகொண்டு பேசியுள்ளனர். இதன்போது அழைப்பு பதிவு செய்யவில்லை என்பதை ஆரம்பத்தில் உறுதி செய்த அவர், 'ஒரு வழக்கு சம்பந்தமாக, ராபியா உயரதிகாரியுடன் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். விரைவில் வீடு திரும்பிவிடுவார். அச்சம் கொள்ளத் தேவையில்லை' என ஆறுதல் கூறியுள்ளார்.

ஆனால், அடுத்த நாள் காலை வீட்டுக்கு வந்த இரண்டு பொலிஸார், ராபியாவின் உடலை அடையாளம் காட்டுமாறு கேட்டுள்ளனர். என்ன நடந்தது? எனத் தெரியாமல் அடையாளம் காட்டச் சென்றவர்களுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.

அங்கு ராபியாவின் உடல் சிதைக்கப்பட்டிருந்தது. அவளின் வாய் வழியாகச் சென்ற கத்தி கழுத்து வழியாக வெளியே எடுக்கப்பட்டிருக்கிறது. அவளின் மார்பகங்கள் அறுத்து வீசப்பட்டிருக்கின்றன. பிறப்புறுப்பு குத்திக் கீறப்பட்டுள்ளது. கழுத்து கிட்டத்தட்ட துண்டிக்கப்பட்டு தொங்கும் நிலையில்; நெஞ்சில் ஆழமான துளையிட்ட ஓட்டை. உடல் முழுவதும் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெட்டுக்கள்; குத்தப்பட்ட காயங்கள். அவள் இறப்பதற்கு சற்று முன்பு, நான்கு பேருக்கும் அதிகமானோர் பாலியல் வன்புணர்வு செய்துள்ளமைக்கான தடயங்களும் காணப்படுள்ளன.

இந்நிலையில், விசாரணைகள் தீவிரமடையவே நிஜாமுதீன் (25) என்பவர், "ராபியாவை நான் தான் கொன்றேன்" என, பொலிஸில் சரணடைந்துள்ளார். அப்போது, "ராபியாவும் நானும் காதலித்து வந்தோம். சமீபத்தில், வீட்டுக்குத் தெரியாமல், திருமணமும் செய்துகொண்டோம். காதலி தான் முக்கியம் என்று அவளைக் கரம் பிடித்தேன். என்னுடைய வீட்டாரைக்கூட மறந்து விட்டு, அவளது நலன்தான் முக்கியம் என்று அவளுடன் இருந்தேன். அரசாங்க பணியில் சேர்ந்தாள்; எங்கள் வாழ்க்கை நன்றாகவே இருந்தது.

> **நிஜாமுதீன் கூறுவதை மறுத்துள்ள அப்பெண்ணின் குடும்பத்தினர், திருமணம் செய்துகொண்டதாகக் கூறுகின்றனர். எங்கள் மகள் ஒருபோதும் அப்படிச் செய்பவள் அல்ல. இது திட்டமிட்ட கொலை என்கின்றனர்**

சில வாரங்களாக, அவளது நடவடிக்கைகளில் மாற்றங்கள் தெரிந்தது. பேச்சிலும் நடவடிக்கையிலும் மாற்றம் ஏற்படவே, எனது சந்தேகத்தை அவளிடம் கேட்டேன். எங்கள் இருவருக்குள்ளும் மோதல் வெடித்தது. அவளுக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருப்பது தெரிந்தது. அதை விட்டுவிடச்சொல்லி பலமுறை சொன்னேன்; அவள் கேட்கவில்லை. அவளைக் கொலை செய்ய முடிவெடுத்தேன். ஒகஸ்ட் 26ஆம் திகதியன்று, வேலை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த அவளை ஃபரிதாபாத்தின் சூரஜ்குண்ட் பகுதிக்கு அழைத்துச் சென்றேன்.

அங்கேயும் எங்களுக்குள் சண்டை வந்தது; வார்த்தை மோதல்கள் அதிகரித்தது. கோபம் அதிகரிக்கவே அவளை நான் கத்தியால் குத்தி கொலை செய்து விட்டேன்" என்று கூறியுள்ளார். இக்கொலை பற்றி விவரித்த போது, நிஜாமுதீன் முகம் உக்கிரமாக இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், நிஜாமுதீன் கூறுவதை மறுத்துள்ள அப்பெண்ணின் குடும்பத்தினர், திருமணம் செய்துகொண்டதாகக் கூறுகின்றனர். எங்கள் மகள் ஒருபோதும் அப்படிச் செய்பவள் அல்ல. இது திட்டமிட்ட கொலை. எங்கள் மகளை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்று, தனது நண்பர்களுடன் சேர்ந்து பாலியல் வன்கொடுமை செய்து விட்டு, பின்னர் கத்தியால் குத்தி கொலை செய்திருப்பதாகவும், அதை மறைக்கவே, தங்கள் மகள் மீது நிஜாமுதீன் அபாண்டமாக குற்றம் சுமத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

நிஜாமுதீனுக்கும் சபியாவுக்கும் திருமணம் ஆனதாகக் கூறும் பொலிஸார், அது சம்பந்தமான ஆவணத்தை இதுவரை வெளியிடவில்லை. ஒருவேளை திருமணம் நடந்தது உண்மை என்றால் கூட, காதலித்த பெண்ணின் மார்பை அறுக்கும் அளவுக்கா ஒருவன் துணிவான் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, ராபியாவின் தந்தை கூறும் விடயம் வேறு திசைக்கு அழைத்துச் செல்கின்றது. "என் மகள் ஒருமுறை, தான் பணியாற்றும் அலுவலகத்தில், ஒரு ரகசிய அறை இருப்பதாகவும் அதில் கோடிக்கணக்கான ரூபாய் பணம் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இப்படி, அந்த அறைக்கு இலஞ்சப் பணமாக தினமும் 4 இலட்சம் வரை வரும் காட்சியை தான் கண்டதாகவும் கூறினார். இந்த நிலையில்தான், அவர் மர்மமான முறையில் இறந்துபோயுள்ளார்" எனக் கூறியுள்ளார். திருமண உறவு, ஆட்சியர் அலுவலகத்தில் இருக்கும் இரகசியப் பணவறை, காவல்துறையின் அலட்சியம் போன்றவை, இந்த வழக்கின் மர்மத்தை மேலும் அதிகரித்துள்ளது.

"எங்கள் மகளின் மார்பகங்கள் அறுக்கப்பட்டுள்ளன. அவளின் உடலில் அடித்துத் துன்புறுத்தியதற்கான காயங்கள் ஏராளமாக உள்ளன. அதேபோல், அவளுடைய அந்தரங்க உறுப்பும் காமுகர்களால் சிதைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் காவல்துறையினர், குற்றவாளி நிஜாமுதீன் மட்டும்தான். அவர் சரணடைந்துவிட்டார் என்கின்றனர்.

இக் கொலையில் தொடர்புடைய பல குற்றவாளிகள் இன்னும் வெளியில் சுதந்திரமாக இருக்கின்றனர். எனவே, காவல்துறையினர் முறையாக விசாரணை மேற்கொண்டு உண்மைக் குற்றவாளிகளை அடையாளம் கண்டு தண்டிக்க வேண்டும்" என வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சமூக வலைத்தளங்களில், இக் கொலை தொடர்பாக நியாயமான முறையில் விசாரித்து, கொலையின் உண்மைப் பின்னணியை வெளிக்கொண்டு வர வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் நீதிகேட்டு போராடி வருகின்றனர். பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அச்சமூட்டும் அளவுக்கு அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இவற்றைத் தடுப்பதற்கு ஆரம்பக்கல்வி முதலே, பெண்கள் சமத்துவம், மரியாதை, பெண்கள் வெறும் உடல் அல்ல என்பது பற்றி குழந்தைகளுக்கு போதிக்க வேண்டும். பாலியல் குற்றவாளிகளைத் தண்டிப்பதோடு மட்டுமல்லாமல் பாலியல் குற்றவாளிகளை மனசாட்சியில்லாமல் காப்பாற்ற முயற்சிப்பதும், வெட்கமில்லாமல் பொதுவெளியில் ஆதரிப்பதும் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படவேண்டும். அப்பொழுதுதான் குற்றங்கள் குறையும் என்பது பகிரங்கமான உண்மை ஆகும்.



# வறுமையின் பரிசு
# கல்விக்கு விடை



மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

**கொடிய கொரோனாவால் முழு உலகமும் முடங்கியது என்றாலும், தடுப்பூசி, சுகாதார பாதுகாப்புகளை அதிகரித்து முடக்கத்திலிருந்து மீண்டு, அந்தந்த நாடுகள் வழமை நிலைக்குத் திரும்பினாலும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இதன் தாக்கத்தை சமாளிக்க முடியாமல் திணறிப் போயுள்ளன.**

அபிவிருத்தி அடைந்து வரும் ஏனைய நாடுகளை விட, இலங்கையானது, ஏற்கெனவே 30 வருட யுத்தம் அதிலிருந்து மீண்டு கொஞ்சம் தலைதூக்கிய போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அதனைத் தொடர்ந்து தற்போது ஒன்றரை வருடங்களாக கொரோனா தாக்கம் என்பவற்றிலிருந்து மீழெழ முடியாமல், பாரிய பொருளாதார சரிவுக்கு முகம் கொடுத்துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதார சரிவு என்பதை அந்தத்துறையுடன் தொடர்புபட்டவர்கள் மாத்திரமே உணர்ந்த காலம் மாறி, இன்று நாட்டில் சாதாரண படிப்பறிவு இல்லாதவன் கூட, நாட்டின் பொருளாதார நிலை குறித்து பேசும் அளவுக்கு, நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, எவ்வளவு மோசமாகி வருகிறது என்பதை, நாளுக்கு நாள் அதிகரிக்கும் பொருள்களின் விலையேற்றம் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாடுகளே உணர வைப்பதுடன், ஒரு வித அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

அதாவது, எமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, அதனைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் என்பவற்றால், நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது அல்லது பஞ்சம் ஏற்படப் போகின்றது என்பதை, அண்டை நாடான தென்னிந்திய ஊடகங்கள் வரிக்குவரி, நொடிக்கு நொடி கூறுவதைக் கேட்டு இலங்கையர்கள் பீதியடைந்துள்ளனர்.

இலங்கையில் 1978ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாநாயக்கவின் ஆட்சியில், இறக்குமதி பொருளாதாரம் தடை செய்யப்பட்டவுடன், நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடியது என்பதை, 1980களுக்கு முன்பு பிறந்தவர்கள் கூறுவதை 1980க்குப் பிற்பாடு பிறந்த அனைவரும் கேட்கமட்டும் தான் செய்துள்ளோம்; அனுபவிதத்தில்லை.

ஆனால், நாடு மீண்டும் 1978ஆம் ஆண்டு யுகத்தை நோக்கிச் செல்கின்றதா என நினைத்துப் பார்க்கும் போது உடல் சிலிர்க்கின்றது. பஞ்சம் என்ற வார்த்தையை, செவிகளால் கேட்ட எமக்கு அதனை அனுபவிக்கப் போகிறோமா என்ற அச்சம் ஒரு புறமிருக்க, நாம் அனுபவித்த வறுமையை எமது குழந்தைகளும் அனுபவிக்க கூடாது என்ற எண்ணத்தில், தற்போதைய பிள்ளைகள் எதைக் கேட்க நினைத்தாலும் அவர்கள் கேட்டு முடிக்கும் முன்னமே வாங்கி வைத்து விடும் பெற்றோரின் குழந்தைகள், பஞ்சம் என்ற வார்த்தைக்கு அகராதியை புரட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையில், உணவுப் பஞ்சம் ஏற்படப் போகிறது என்ற வெளிவரும் தகவல்கள் பொய்யல்ல என்பதை இப்போதைய இளைய சமூகமும் அதிகம் உணரும் வகையில், நாட்டில் காணப்படும் அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாடு உணர்த்தி வருகின்றன.

எனவே, தான் இந்த உணவுப்பொருள்களின் தட்டுப்பாட்டால் வறுமையின் தாண்டவத்துக்கு முகக்கொடுக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் எதிர்கால தலைவர்களான இன்றைய மாணவர்கள், கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வறுமையை அனுபவிப்பவனுக்கே அதன் வலி புரியும். வறுமைக்கு மத்தியில் கல்வியாவது பட்டமாவது முதலில் ஒரு வேளைக்காவது வயிற்றை நிரப்புவதற்கு வழியைப் பார்ப்போம் என, கல்விக்கு 'குட்பாய்' சொல்லி வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கை, கடந்த ஒன்றரை வருடங்களாக நாட்டில் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, எப்போதும் கல்வியில் ஒரு பின்தங்கிய சமூகம் யாரென்றால், அது மலையக சமூகம் எனத் தயக்கமின்றி விரல் நீட்டப்படும். ஆனால், இந்த அவலநிலையை மாற்றும் வகையில், கடந்த இரண்டொரு தசாப்தங்களாக மலையக கல்வி, பாரிய வளர்ச்சியடைந்து வந்துள்ளதைப் பல விடயங்கள் சான்று பகிர்ந்துள்ளன.

எனவே, கல்வியால் மாத்திரமே எமது சமூகத்தை மாற்ற முடியும் என்ற உத்வேகம், உண்மையில் இன்று மலையக சமூகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆனால், இன்றைய கொரோனா நிலை, அதனால் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார வீழ்ச்சி என்பது, மலையக கல்வி சமூகத்தை மீண்டும் 1980ஆம் ஆண்டுக்கு இழுத்துச் சென்றுவிடுமோ என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

அதாவது, மீண்டும் மலையகத்தில் கொரோனாவால் ஏற்பட்ட வறுமையை காரணம் காட்டி மாணவர்கள் பாடசாலை கல்விக்கு முற்றப்புள்ளி வைப்பது அதிகரித்து வருகின்றது.

கொரோனாவால் ஏற்பட்ட வறுமை மட்டுமல்ல. இன்று எமது நாட்டின் கல்வித்துறைக்கு ஏற்பட்டுள்ள அவலமும் மாணவர்களின் மனங்களை திசை திருப்பியுள்ளமையே நிஜம்.

குறிப்பாக, உயர்தரம் கற்கும் மாணவர்கள், சாதாரண தர பரீட்சை எழுதிவிட்டு, பல மாதங்களாக பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்கள் மாத்திரமின்றி, பல ஆசிரியர் பயிலுநர்கள் கூட, தமக்கான வருமானத்துக்காக கூலிவேலைகளை நாடத் தொடங்கியுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.


கொரோனாவால் பாடசாலைகள் பூட்டப்பட்டாலும் விரும்பியோ விரும்பாமலோ நிகழ்நிலைக் கற்றலுக்காகவேணும் சில பல மணித்தியாலங்களை கல்விக்காக அர்ப்பணித்த மாணவர்கள் இன்று நிகழ்நிலை கற்றலுக்கும் சிலரது பிடிவாதங்களால் சாவு மணி அடிக்கப்பட்டுள்ளதால் வீட்டிலிருந்து வெட்டியாய் பொழுதைப் போக்குவதற்கு பதிலாக, ஏதாவது தொழிலுக்கு சென்று குடும்ப வருமானத்துக்கு கைக்கொடுக்கலாம் என தீர்மானித்து, பல தொழில்களை நாடிச் சென்றுள்ளனர்.

இதில் பெரும்பாலான மாணவிகள், ஆடைத் தொழிற்சாலைகளை நோக்கி நகர்ந்துள்ள நிலையில், மாணவர்கள் அன்றாட கூலி வேலைகளான குறிப்பாக தச்சுத் தொழில், விவசாய நிலங்களில் கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

மலையைகத்தில் இவ்வாறு மாணவர்கள் கூலித் தொழிலில் ஈடுபடுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், சில பகுதிகளில் ஆசிரியர்களுக்கான பிரத்தியேக வீடுகள் (குவாட்டர்ஸ்களில்) தங்கியிருக்கும் ஆசான்களோ அந்த பிரதேசத்திலுள்ள சில மாணவர்களை கற்பித்து தருவதாக அழைத்து, அவர்களது வீட்டு வேலைகள், வீட்டு தோட்டங்களில் மரக்கறி செய்கைகளில் ஈடுபடுத்துகின்ற அவலமும் மலையகத்தில் அரங்கேறுகின்றன.

அதேபோல், மொனராகலை போன்ற பகுதிகளிலும் மாணவர்கள் கரும்பு சேனைகளுக்கு நாட்கூலிகளாக சென்றிருப்பது வேதனைக்குரிய விடயமாக இருந்தாலும் இவர்களுள் பலர் மீண்டும் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பித்தால் கூலித் தொழில்களை கைவிட்டுவிடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் இரத்தினபுரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழர்கள் எப்போதும் பல அவலங்களுக்கு மத்தியில் தான் வாழ்ந்து வருவார்கள். இதை காலம் காலமாக அங்கு தமிழர்களுக்கு எதிராக அரங்கேரும் சம்பவங்கள் வெளிச்சம் போட்டு காட்டும். எனவே, இங்குள்ள தமிழர்களின் தலைவிதியை மாற்ற வேண்டுமாயின் அது கல்வியால் மாத்திரமே முடியுமென நாளை தலைவர்களான இன்றைய மாணவர் சமூகம் உணர்ந்தாலும் பற்பல காரணங்களால் வெறுமனே உணர்வற்ற உணர்வுகளாக மாத்திரமே காணப்படுகின்றது.



# உணவு அரசியல்



பிரியா ராமநாதன்
pr4782@gmail.com



நமது சமூகம் 'உணவே மருந்து' எனும் பாரம்பரியத்தைக் கொண்டது. ஆனால், தற்போது அந்த உணவே விஷமாகிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. இதற்கு என்ன காரணம்? இதன் பின்னணியில் இருக்கும் உணவு அரசியல் என்ன?

உழவன் தலைநிமிர்ந்து நின்றகாலம்போய், உழவுத்தொழில் மழுங்கடிக்கப்பட்டு, வணிகத்தின் பின்னால் சுழன்றுகொண்டிருந்த நமக்கு தற்போதைய இலங்கையின் நிலை உணவு உற்பத்தி பற்றியெல்லாம் கொஞ்சம் சிந்திக்கத்தான் செய்திருக்கின்றது.

நாட்டின் மொத்த இறக்குமதியில் இந்த செயற்கை உரங்களின் இறக்குமதியும் பாரிய பங்களிப்பைச் செய்கிறதெனலாம். தற்போது ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையால் எந்தெந்த இறக்குமதியிலெல்லாம் கை வைக்கலாம் என சிந்தித்த இலங்கை அரசு, இந்த செயற்கை உரங்களின் இறக்குமதியிலும் கைவைத்தது. "இயற்கை உரங்களை நம்பி இனி விவசாயம் செய்வோம்" எனவும் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

இது நல்ல விடயம்தான். ஆனால், அவசரமாக இது சாத்தியப்படுமா? ஏனெனில், அதுவொரு நீண்டகால திட்டமாக அமையவேண்டிய செயன்முறை. தமிழ்த் திரைப்படங்களில் வரும் ஒரேயொரு பாடலிலேயே பணக்காரராக மாறும் பார்முலாவோ அல்லது ஒரே இரவில் நடந்துவிடும் மேஜிக்கோ அல்ல.

இயற்கை உரங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள், செயற்பாடுகளை இலங்கை அரசு முதலில் நடைமுறைப்படுத்தவேண்டும். அதன் உற்பத்தியாளர்களுக்கு மானியங்கள், பயிற்சிகளை வழங்கவேண்டும். அதைவிடுத்து, நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த ஒரு சிஸ்டமான, செயற்கை உரங்களை நம்பியே விவசாயம் செய்துபழகியபின்னர், அதனை சடுதியாக தடைசெய்வதென்பது பதுக்கி வைத்தல், அதிக விலையேற்றம், விளைச்சலின்மை, விவசாயிகள் நட்டமடைதல், அவர்களின் கடன் சுமை என இனி விவசாயமே வேண்டாம் எனும் அளவிற்கு, மனஉளைச்சல் உற்பட பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்று.

படிப்படியான மாற்றங்களை செயற்படுத்த முன்வருவதே ஒரு நல்ல ஆட்சியாளர்களின் அழகு. ஆனால், தற்போது இவர்கள் போட்டிருக்கும் 'சடன் பிரேக்' எத்தனைபேரை தூக்கியெறியுமோ?

கடந்தவாரம் ஆளும்கட்சி உறுப்பினரொருவர், "இனி இலங்கை மக்கள், தம்முடைய ஒருவேளை உணவினை தியாகம்செய்துவிட்டு, இரண்டு வேளைகள் மட்டுமே உணவு உண்ண வேண்டும்" எனக்கூறிய கருத்து சமூகவலைதளமெங்கும் வைரலாகி, பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது.

ஆட்சிக்கு வருபவர்கள் ஒரு சிறந்த வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்புவார்கள் என்கிற நம்பிக்கையிலேயே, ஒவ்வொரு குடிமகனும் வாக்களித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், ஆட்சிக்குவந்தபின்னர், அவர்கள் மக்களைப்பற்றி யோசிக்காமல், பொறுப்பற்ற ரீதியில் கூறும் கருத்துகளும் எடுக்கும் முடிவுகளும், வாக்காளர்களை ஓர் அயர்ச்சி நிலைக்குத் தள்ளிவிடுகின்றன எனலாம்.

ஒருவரது உணவை சுருக்கிக்கொள்ள வேண்டும் என யாரும் கட்டளையிடுவதென்பது, என்னைப் பொறுத்தவரையில், அடிப்படை மனித உரிமை மீறலே ஆகும்.

பொருட்களுக்குத் தட்டுப்பாடா? அதற்கான மாற்றுத்தீர்வுகள் முன்மொழியப்பட வேண்டும். தட்டுப்பாட்டில் இருக்கும் உணவிற்கு பதிலாக, வேறு உணவுகளை மாற்றீடாக பயன்படுத்துவது பற்றி அறிவுறுத்தல், வீட்டுத்தோட்டங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுதல் போன்றவற்றை எடுத்துக்கூறலாம்.

ஆனால், எடுத்தஎடுப்பில் "இனி எல்லோரும் இரண்டுவேளைகள் மட்டும் உண்ணுங்கள்" என ஒரு ஆட்சியாளர் கூறுவதென்பது, பொறுப்பற்றசெயல். ஏற்கெனவே இந்திய ஊடகங்கள் தங்களுடைய Trp ரேட்டிங் என்கிறவொன்றுக்காக இலங்கையில் கடும் பஞ்சம்; மக்கள் எல்லோரும் நடுத்தெருவில் நிற்கிறார்கள் என அள்ளிவிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், உள்நாட்டுக்குள் ஓர்அமைச்சரின் இப்படியான கருத்துகளும் வருமாயின், இலங்கையை நம்பி, முதலீடுகளை செய்யவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள்.

வளர்ந்த நாடுகளும் பன்னாட்டு நிறுவனங்களும், உணவு அரசியலை எப்படியெல்லாம் நம்மீது திணித்துவருகின்றன என்பது பற்றி, சற்று தேடிப்பார்த்தபோது கிடைத்த தகவல்கள் அதிர்ச்சியாக இருந்தன. இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த நிலையில் ஏராளமான எதிரி நாடுகளை தாக்கவைத்திருந்த வெடிபொருட்கள், தொன் கணக்கில் மீதமாயினவாம். அந்த வெடிபொருட்களையெல்லாம் என்ன செய்வது என, அந்த நாடுகள் யோசித்துக்கொண்டிருந்தபோது, அவற்றை பூச்சிக்கொல்லிகளாகப் பயன்படுத்தலாம் என அறிவியல் அறிஞர்கள் தெரிவித்ததையடுத்து, பூச்சிகளால் உணவு உற்பத்தி, குறைவு பற்றி கவலையடைந்திருந்த ஆபிரிக்க மற்றும் கீழைத்தேய நாடுகளுக்கு, குப்பை என கழிக்கப்பட்ட இந்த வெடிபொருட்கள் உள் நுழைந்தன.

இரண்டாம் உலகப்போரின்போது, ஹிட்லர் பல லட்சம் மக்களைக் கொன்றுகுவிக்க பயன்படுத்திய ஒரு வேதியல் பொருளைத் தயாரித்துக்கொடுத்த ஜெர்மனியின் ஒரு பிரபலமான கெமிக்கல் நிறுவனம்தான், இன்றுவரையில் செயற்கை உரங்களை தயாரிப்பதில் முன்னோடி என்றால் இனி சொல்வதற்கென்ன இருக்கிறது?

ஒரு காலத்திற்குமுன், அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில், மண்ணில் சத்தில்லாமல் விவசாயம் மேன்படாமல் இருக்கவே, என்ன செய்வதென்றறியாமல் கல்லறைகளில் இருக்கும் மனித எலும்புகளையெல்லாம் எடுத்து, பொடியாக்கி அதனை உரமாகப் பயன்படுத்தினார்கள். பின்னர் இந்த மனித எலும்புகளை, வேட்டையாடுவதற்காகவே கல்லறை மயானங்களை வேட்டையாடினர்.

இப்படி இவர்கள் எந்தெந்த நாட்டுக்குள்ளெல்லாம் நுழைந்து வேட்டையாடினார்களோ, அந்தந்த நாடுகளின் மண் சத்து இல்லாமலாகி அங்கெல்லாம் விவசாயம் வீழ்ந்துவிட, மேலை நாடுகளில் விவசாயம் தப்பித்துக்கொண்டது. பின்பு ஓர் அறிவியலாளர், பறவைகளின் எச்சத்தில் நைட்ரஜன் இருக்கிறது; அதை வைத்து விவசாயம் செய்யலாம் எனக் கண்டறிந்தபோது, ஆளாளுக்கு பறவை எச்சத்தினைத் தேடி, பல தீவுகளையும் அடிமைப்படுத்திக்கொண்டன. இப்படி மேலைநாடுகளெல்லாம், தம் நாட்டு மண்ணையும் விவசாயத்தையும் ஏதொவொரு வகையில் பேணிப்பாதுகாத்துக்கொள்ள, (அவர்கள் விற்கும் செயற்கை உரங்களை இறக்குமதி செய்துகொண்டு) மூன்றாம் உலக நாடுகள் மட்டும், வல்லரசுகளினதும் பன்னாட்டு நிறுவனங்களினதும் சூழ்ச்சியில் சிக்குண்டு சின்னாபின்னமாகியுள்ளதென்றே கூறவேண்டும்.

விவசாயப்பொருட்கள்மீது தெளிக்கப்படும் பூச்சி மருந்துகள் எவ்வளவுதான் மழை பெய்தாலும் எவ்வளவுதான் கழுவியெடுத்தாலும் அந்த கிரிமிநாசினிகளின் எச்சங்கள் முழுதுமாக அகன்றுவிடுவதில்லை. காலப்போக்கில் கண்ணுக்குத் தெரியும் அளவில் அவை மாறிப்போயின. உதாரணம், நாம் உண்ணும் திராட்சை போன்ற பழங்களில் படிந்திருக்கும் வெள்ளைநிறமான படிமம், பூச்சிக்கொல்லிகளின் எச்சம் என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரிந்திருக்கும்?

உலக நாடுகள் பூச்சிக்கொல்லிகளின் பாதிப்பையுணர்ந்து தடைவிதித்த நிலையில், நம்முடைய நாட்டில் 'DTTA' என்கிற அபாயகரமான பூச்சிக்கொல்லி வீட்டைச் சுற்றியுள்ள எறும்புகளைக் கொல்லக்கூட சர்வசாதாரணமாக பயன்படுத்தப்படுகிறது. உண்மையில், பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படும் உணவை உண்பவர்களின் நூறுபேரில் முப்பது பேருக்கு புற்றுநோய் வரும் அபாயம் உள்ளதாக கூறப்படுகிறது. உணவும் உடல்நலமும் ஒன்றோடொன்று சேர்ந்தே இயங்கும் வாழ்வியலைக்கொண்ட நமது நாட்டில், இன்று உணவு தனியாகவும் ஆரோக்கியம் தனியாகவும் பிரிந்து, வணிகம் செய்கிறது என்பதுதான் நிஜம்.

இப்படிப் பூச்சிக்கொல்லிகளின் பாவனை அதிகரிக்க, உணவுக்குப் பின்னால் இருக்கும் நுண்அரசியலே காரணம். முன்பெல்லாம் நெல் போன்ற பிரதான பயிர்களை பயிரிட்டதன் பின்னர், விவசாயிகள் உபபயிர்களாக பருப்பு, பயறு வகைகளை அதிகமாகப் பயிரிட்டனர். உண்மையில் அதன் பின்னிருக்கும் சூட்சமம் என்ன தெரியுமா ? இயற்கையாகவே காற்றில் இருக்கும் நைட்ரஜன், பொஸ்பரஸ் போன்ற சத்துகளை உறிஞ்சும் பருப்புவகை பயிர்கள், பூமியின் அடியில் சேமித்துவைக்கும்போது, நிலம் அதற்குத்தேவையான தழைச்சத்தை இயற்கையாகவே பெற்றுக்கொள்ளும்.

ஆனால், இலங்கையில் தாராளமாக பருப்புவகைகளும் சிறு தானியங்களும் இறக்குமதி செய்யப்படுவதால் அதன் விளைவு? பன்னாட்டு நிறுவனங்களால் விற்கப்படும் செயற்கை உரமான நைட்ரஜனை காசுகொடுத்து வாங்கி, நிலத்தையும் பாழ் படுத்திக்கொண்டிருக்கின்றோம். யூரியா என்கிற விஷத்தை உரம் என்கிற பெயரில் பலதலைமுறைகளாக விவசாயிகள் நம்பி பயன்படுத்திவந்தனர்.

ஒரு நாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், அந்நாட்டின்மீது போர் தொடுத்துதான் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற நிலைமைமாறி, உணவே பேராயுதம் என்கிற மோசமான ஆயுதத்தை கையில் எடுத்திருக்கின்றன வல்லரசுகள் என்றால் மிகையில்லை. பன்னாட்டு நிறுவனங்கள் லாபம் சம்பாதிக்க, நம் மண்ணை நாமே விஷமாக்கிக் கொண்டிருக்கின்றோம். உணவு, மருந்து வணிகத்தின் இலாப நோக்கத்தால், உணவானது நஞ்சாகமாறி, பல நோய்களையும் இயற்கை சீர்கேடுகளையும் உருவாக்கியுள்ளது.

இந்தநிலையில், இயற்கை உணவை நாடியும் இயற்கை விவசாயத்தை நாடியும் மக்கள் பயணப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள்.





'வாழ்ந்தாலும் ஏசும்; தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதான...'

# ஆதாரம் இல்லாத தாரங்கள்

**கணவனை இழந்து, குடும்பத்தைக் கொண்டுநடத்தும் பெண்களின் 'கண்ணீர்'**



சுப்பிரமணியம் பாஸ்கரன்

முழு நாட்டையும் அச்சுறுத்தி வரும் கொவிட் -19 பெருந்தொற்றுக் காரணமாக, சிறுவர்கள் பல வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, இன்று பாடசாலைகள் தொடர்சியாக மூடப்பட்டுள்ளதால், கல்வியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிகளவான குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்குவதால், சிறுவர்களின் போசாக்கில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக, கடந்த காலத்தில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக, இலங்கையில் பெண்களும் சிறுவர்களுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக நாடுகளின் போராட்ட வரலாறுகளிலும், அதிகளவில் பாதிப்புகளை எதிர்கொண்டவர்களாக சிறுவர்களும் பெண்களுமே காணப்படுகின்றனர்.

வடமாகாணத்தில் காணப்படும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் அதிகளவானோர், 1980ஆம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக, கணவனை இழந்த, காணாமல் போன, கணவனால் கைவிடப்பட்ட, பாதுகாப்பு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் எனப் பல்வேறு யுத்த பாதிப்புகளால் உருவானவையாகவே, அதிளவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அவர்கள் வாழும் சமூகத்தில் ஏற்கெனவே பல்வேறு வகையான நெருக்குதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இன்று கொவிட்-19 சூழலில், வருமானம் இன்மை, உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாமை, தொழில் வாய்ப்பின்மை என்பன மேலும் பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன.

தமிழர் சமூகம், மரபு ரீதியாக தாய் வழி வந்த சமூகமாக இருந்துள்ளதாக, வரலாறுகள் கூறுகின்றன. ஆண்கள், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக உழைப்புகளை நாடி வெளியில் செல்வார்கள்; பெண்கள், குடும்ப நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வார்கள். இதுவே பண்டைய தமிழர் வாழ்வியலாக இருந்துள்ளது. அவர்கள், பெண்களுக்கு மதிப்பளித்து வாழ்ந்த வரலாறுகள் இருக்கின்றன.

பின்னர், கால மாற்றம், சகலவற்றையும் தலைகீழாக மாறியுள்ளது. குடும்பத்தில், சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்ட அடிமைகளாக, பெண்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதுவே, மரபாக மாறியது; ற்பு என்ற ஒன்றை, பெண்களுக்கு மட்டும் சொந்தமாக்கி, அவர்கள் மீது ஒடுக்குமுறைகள் ஏவி விடப்பட்டன.

இந்த மரபு ரீதியான தாக்கம், இன்றைய பெண் தலைமைத்துவக் குடும்பங்களிலும் அதிகளவிலான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

அதாவது, பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்று, பொருளாதார ரீதியில் உயர்வாகக் காணப்பட்டால், அந்தப் பொருளாதார ரீதியான உயர்வுக்கான காரணம், சமூகத்திலுள்ளவர்களால் தவறாகப்பார்க்கப்படும். அதேவேளை, பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்று, வறுமையை எதிர்கொள்ளுமாக இருந்தால், அதனை இலக்காக வைத்து, பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் போன்ற நெருக்குதல்கள், அக்குடும்பத்தின் மீது ஏற்படுத்தப்படும். இவ்வாறு பல பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், சமூகத்தில் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.





இதனால், சமூகத்தில் பெண்கள் அல்லது பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பெரும் நெருக்குதல்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலமை காணப்படுகின்றது.

குறிப்பாக, பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்கு வைத்து, நுன்கடன் நிதிநிறுவனங்கள் அதிகூடிய வட்டி வீதங்களில் கடன்களை வழங்குதல், அதனை அறவிடுதல், குடும்ப சுமைமை சுமக்கும் பெண் தலைமைத்துவக் குடும்ப உறுப்பினர்களுக்கு வேலைகளை வழங்கி, குறைந்த வேதனங்களை வழங்குதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பிலான அநீதிகளை வெளிப்படுத்தவோ முடியாது. இவ்வாறான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், சமுகத்தில் நெருக்குதல்கள், துன்புறுத்தல்கள் இன்றி வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தக் கூடிய விழிப்புணர்வுகள், இன்று அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

யுத்தத்தில் பெண்கள், சிறுவர்கள் அதிகளவான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதையும் அதன் பாதிப்புக்கள் இன்னும் தொடர்கின்றன; அல்லது, அதிலிருந்து விடுவிக்கப்படுவதிலுள்ள நெருக்குதல்கள் உலக நாடுகளில் இடம்பெற்ற யுத்தங்கள் உணர்த்தியுள்ள சூழலில், இன்று உலகையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ள கொவிட் -19உம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவிட் -19 அச்சுறுத்தல் காரணமாக, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாதிப்புகளை எதிர் கொண்டு இருக்கின்றார்கள். அதாவது, கூடுதலான பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தொழில் வாய்ப்புகளை இழந்திருக்கின்றனர். குறிப்பாக, தினக்கூலி வேலை செய்கின்ற, சிறு சிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தங்களுடைய கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற பெண்கள் எனப் பலதரப்பட்ட வகையிலே, தங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த குடும்பங்கள், கொவிட் -19 அச்சுறுத்தல் காரணமாக, தொழில் ரீதியாகப் பாதிப்புகளையும் இதனால் மன ரீதியான பாதிப்புகளையும் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையிலேயே, இவ்வாறான பாதிப்புகளை எதிர்கொண்ட சமூகத்துக்கு, பல்வேறு தரப்பினரும் தங்களுடைய முயற்சியின் பயனாக, கொடையாளர்கள் ஊடாகப் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது கூடுதலான குடும்பங்களுக்கு பெரும் உதவியாக அமைந்திருக்கின்றது.

இவ்வாறு, பெண் தலைமைத்துவக் குடும்பங்களில், குடும்ப சுமையை தாங்குகின்ற பெண்கள், தொழில் தேடிச்செல்லும் போது அல்லது, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, சமூகத்தின் பார்வை, தவறான ஒரு பார்வையாகவே உள்ளது.

எனவே, இவ்வாறான பாதிப்புகளை எதிர்கொண்டு, இழப்புகளில் இருந்து மீண்டு வரும் இவ்வாறான சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீதான சமூகத்தின் பார்வையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

அத்துடன், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட வசதிகளும் கட்டியெழுப்பப்பட வேண்டும். "போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்; ஏற்றதோர் கருத்தை எனதுள்ளம் என்றால் தொடர்ந்து செல்; துணிந்து நில்; கருமத்திலே கண்ணாயிரு" என்ற வரிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மந்திர வாக்கியமாக இருக்க வேண்டும்.

# கொரோனாவில் முளைத்த சிறு முதலைகளின் கைகளை இறுக்குங்கள்

சிவப்பு வலயத்துக்குள் சிக்கிக்கொண்டிருக்கும் நாடு, எப்போது திறக்குமென ஒருதரப்பினரும் இப்போதைக்கு திறக்காமல் இருப்பதே நல்லதென உள்மனதில் நினைத்துகொண்டிருக்கும் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால், இருப்பதும் கரைந்துகொண்டே போகிறதென பேரச்சத்தில் சாதாரண மக்கள் பொழுதை கடத்திக்கொண்டு செல்கின்றனர்.

செப்டெம்பர் 21ஆம் திகதி வரையிலும் அமலில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், சில பல கட்டுப்பாடுகளுடன் திறக்கப்படுமென ஆருடம் கூறப்பட்டிருந்தாலும் தொடர்ச்சியாக 10 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுவிட்டது. கொரோனா மரணங்கள் குறைந்திருந்தாலும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சி ஏற்படவில்லை.

ஏற்கெனவே, அழுத்தம் திருத்தமாக பலமுறை குறிப்பிட்டதைப் போல, 'அத்தியாவசியம்' எனும் பெயரில் அத்தியாவசியமற்ற பலவும் இடம்பெறுகின்றன. ஓரிண்டு பலகைகள் அல்லது முழங்காலுக்கு கீழே திறந்திருக்கும் கடைகளிலும் கொரோனாவில் முளைத்த கடைகளிலும் பொருள்களின் விலைகள் எகிறியே நிற்கின்றன.

தாராசு தின்றுவிட்டதைப் போல, மூடியிருக்கும் கடைகளுக்குள் நிறுக்கப்படும் பொருள்களின் அளவும், கொள்ளவும் குறைந்தே இருக்கிறன. கொரோனா தொற்றெனப் பார்க்காது, பெரிதாக விழுங்கி பெருமுதலைகள் ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கும் நிலையில், இன்னும் கொஞ்ச நாளைக்கு திறக்கக்கூடாதென்பதே சிறுமுதலைகளின் எண்ணமாகும்.

சின்னச்சின்ன கடைகளிலும் மூடப்பட்டிருக்கும் கடைகளிலும் சாதாரண ஒவ்வொரு பொருளும் 5 ரூபாய் முதல் ஏன்? 20 ரூபாய் வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. பெருநகரங்களில் அன்றாடம் வேலை செய்வோரும், வாடகைக்கு குடியமர்ந்து இருப்போரும், மூவேளையையும் கடையே கதியென இருப் போரும் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

ஒருநேர உணவாக ஒருபெக்கட் பிஸ்கட்டை உண்டு வயிற்றுப்பசியை போக்கிக்கொண்டவர்கள், அதனைகூட கொள்வனவு செய்வதற்கு தயங்குகின்றனர். இரண்டொரு பிஸ்கட்டுகளைச் சாப்பிட்டு, பால் தேநீர் குடித்தவர்களுக்கு முழுப்பெக்கட்டையும் சாப்பிட்டாலும் பசியை ஆற்றிக்கொள்ள முடிவதில்லை; பாலும் இல்லை என்பதே உண்மை.

இதற்கிடையில் இன்னும் பத்து நாள்களுக்கு வாயையும் வயிற்றையும் கட்டிக்கொண்டு வாழ்வது, மாதாந்தம் சம்பளம் பெறுபவர்களுக்கு இலகுவாக இருக்கலாம். ஆனால், நாள்கூலிகளாக இருப்பவர்களுக்கு பெரும் சுமையாகிவிடும். காது, மூக்குகளில் கிடப்பதைக்கூட கழற்றமுடியாத நிலைமைக்குள் அவ்வாறான பிரிவினர் தள்ளப்பட்டுள்ளனர்.

மழைக்கு முளைத்தைப் போல, கொரோனாவுக்குள் முளைத்த சின்னஞ்சிறிய பெட்டிக்கடைகள், அத்தியாவசியப் பொருள்களுடன் உலாவுவோர், ஓரிரு பலகைகளை திறந்துவைத்திருக்கும் சிறு முதலைகளின் மீதும் நுகர்வோர் அதிகார சபையினர் கண்களை வைக்கவேண்டும். இல்லையேல், வீடுகளுக்குள்ளே முடங்கியிருக்கும் பலரும் வீடுகளுக்குள்ளே அடக்கப்பட்டுவிடக்கூடும்.

நாடு, சிவப்பு வலயத்துக்குள் இருப்பதால், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டதை வரவேற்கவேண்டும். ஆனால், சாதாரண பொதுமக்களிடமிருந்து சுரண்டுவோர் தொடர்பிலும் அதீத கவனத்தை செலுத்தவேண்டும். இருந்ததைக் கொண்டு வாழ்ந்தார்கள், இருப்பதைக் கொண்டு வாழ்கின்றார்கள். எதிர்காலத்தில் எல்லாமே பூஜ்ஜியமாகிவிடும் என்பதே எமது கவலை.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# இலங்கைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்?

**லக்ஸ்மன்**

கொரோனா வைரஸின் பேகமான பரவல் அச்சம் இருந்து கொண்டிருக்கையில், ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையகத்தின் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில், இலங்கையின் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குத் தாக்குதல் அச்சுறுத்தல், நாரேகஹம்பிட்டி வைத்தியசாலைக் கழிப்பறைக்குள் கைக்குண்டு மீட்பு, யாழ்ப்பாணம், கொடிகாமத்தில் இரண்டு வெடிகுண்டுகள் மீட்பு, திருகோணமலை, மூதூரில் இரண்டு கிளைமோர்கள் மீட்பு என்றெல்லாம் செய்திகள் கடந்த வாரத்திலிருந்து தொடர்ச்சியாக வெளிவந்தவண்ணமிருக்கின்றன.

நேரடியாகச் சொன்னால், கடந்த 13அம் திகதி முதல் சர்வதேச ரிதியில் எழுந்திருக்கும் அழுத்தங்கள் இலங்கையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் வடிவத்திலும் எதிரொலிக்கின்றன என்றே இவற்றைக் கொள்ள முடிகிறது. ஏன் இவ்வாறான வெடிபொருள்கள், குண்டுகள் இன்னமும் வெளிவருகின்றன என்பது திரைமறைவானவையாகவே இருக்கின்றன.

1978களுக்குப் பின்னர் இருந்து, பல்வேறு ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருவாகி, இப்போது அவை அரசியல் கட்சிகளாக மாறிவிட்டன. விடுதலைப்புலிகள் அமைப்பினர் தற்போது இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டார்கள். 2009ஆம் ஆண்டு போர் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டது. ஆனால், இந்த 12 வருடங்களின் பின்னரும் வெடிக்காத குண்டுகள் மக்கள் கண்களில் படும் வண்ணம் இருக்கின்ற அளவுக்கு நிலைமை காணப்படுகிறது.

ஒன்றை மறைப்பதற்கு இன்னொன்று என்பது போல், தாக்குதல் அச்சம் என்கிற ஒன்றை இப்போதிருக்கின்ற நிலைமைகளை மறைப்பதற்காக இலங்கையில் பயன்படுத்தப்படுகிறது என்றே கொள்ள முடியும். மனித உரிமைக் கெதிரான அச்சுறுத்தல்கள் அதிகரித்திருக்கின்றன. கருத்துச் சுதந்திரம் அடக்கப்படுகிறது. மக்களின் நினைவுகூரும் உரிமை பறிக்கப்படுகிறது என பல அடக்குமுறைகள் இலங்கையில் நடைபெற்றவருகின்றன என்பது மனித உரிமை சார் தரப்பினரது குற்றச்சாட்டாக இருக்கிறது.

2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டு சரியாக 10 வருடங்களின் பின்னர் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஈஸ்டடர் குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இது முழு இலங்கையையும் பெரும் அச்சத்துக்குள் தள்ளிவிட்டது. அதிலிருந்து இன்னமும் மீளமுடியாதிருப்பதற்கு காரணங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதன் விசாரணைகளுக்கென நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணை நிறைவடைந்தாலும் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருப்பதாகவே அறிய முடிகிறது.

அச்சமூட்டுவதும் அச்சமுடைய மனோநிலையில் சிங்கள மக்களை வைத்திருப்பதும் ஒருவிதமான தந்திரோபாயம் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும். நாட்டில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பல்வேறு வகைகளிலும் தூபமிடப்பட்ட பயங்கரவாதம் என்கின்ற தீவிரவாதச் சிந்தனை வெடித்தது 2019ல் தான். அதன் பயனாக நவம்பரில் ஜனாதிபதி மாற்றப்பட்டார். 2020இல் அரசாங்கம் மாற்றப்பட்டது. ஆனால் இன்னமும் ஈஸடர் தாக்குதல் விசாரணைக்கான நீதி கிடைக்கவில்லை. அதன் நீதிக்காக கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கிறிஸ்தவ மக்கள், போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நாட்டில் 35 வருடங்களுக்கும் மேலாக நடைபெற்ற ஆயுத யுத்தம் வடக்கு கிழக்கில் வாழும் மக்களை மட்டுமல்ல நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் அனைத்து மக்களையும் இன்னல்களுக்குள் தள்ளியது. சிங்கள மக்களிடம் இருக்கின்ற தமிழர்களது போராட்டம் சார்ந்த பார்வை வெறும் அச்சம் மாத்திரமல்ல. அது நாட்டைப் பறித்துவிடுவார்கள் என்ற பேரச்சம். இந்த அச்சத்துக்கு 1980களிலேயே எமக்குத் தேவை எமது தாயகப்பிரதேசம் என்று பதில் சொல்லப்பட்டாயிற்று. ஆயினும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இருந்தாலும், இப்போதும் நாட்டில் வடக்கு கிழக்கின் இனப்பரம்பலை மாற்றியமைக்கின்ற வேலைத்திட்டம் நடந்த வண்ணமே இருக்கிறது. 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் மக்கள் மீதும் அது ஏற்பட்டுவிட்டது.

அஹிம்சை ரீதியிலான, அரசியல் போராடடங்களின் பயன் ஏதுமின்றிப் போய், நாட்டில் நடைபெற்ற ஆயுத யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு, தமிழ் மக்களின் இனப்பிரச்சினை வன்முறையால் அடக்கப்பட்டது வரை நடைபெற்றவைகள் அநிதிகளே. இருந்தாலும் இறுதிக்கட்ட யுத்தம் மாத்திரமே யுத்தக் குற்றத்துக்குள்ளும், மனிதாபிமானச் சட்ட மீறலுக்குள்ளும் வைத்துப்பார்க்கப்படும் நிலை சர்வதேச அளவில் காணப்படுகிறது.

இங்கு இன அழிப்பு என்பது கண்டுகொள்ளப்படுவதில்லை. இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யக் கூடியவகையில் வரையறுக்கப்பட்ட அளவிலான நடவடிக்கைகள் மாத்திரமே தற்போதும் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த விடயத்தில்தான் தமிழர் தரப்பில் பல்வேறு குழப்பங்களும் காணப்படுகின்றன. தமிழர் தேசிய தரப்பு, தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என பல கடிதங்கள், மனித உரிமைகள் ஆணையாளருக்குப் பறந்தது இதனை உறுதியும் செய்தது.

ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான தொடர்ச்சியான கண்காணிப்புகள், அடக்குமுறைகள் உள்ளடங்கலாக இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் கவலையளிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டு இருக்கின்றன. இந்நிலையில்தான் இலங்கையில் அர்த்தபுஷ்டியுள்ள நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அவசியம் பற்றிப் பேசப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை (13)ஆரம்பமானது முதல், இலங்கையின் அரசியலில் பலவேறு மாறுதல்கள் உருவாகத் தொடங்கியிருக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 47 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் 46/1 என்ற தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது. இம்முறை மனித உரிமை ஆணையாளரின் வாய்மொழி மூல அறிக்கையையும் நிரகரித்திருக்கிறது. ஆனால், இந்த 2021 48ஆவது ஐ.நா அமர்வில் கொண்டுவரப்படும் தீர்மானம் என்ன பிரதிபலிப்பைத் தரும் என்பது தெரியாத விடயமே.

இந்த இடத்தில்தான் இணை அனுசரணை நாடுகள் எதிர்பார்க்கின்ற அர்த்தபுஷ்டியுள்ள நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை சாத்தியமாகுமா என்ற கேள்வி தோன்றுகிறது. நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகள், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் தொடர்ச்சியான செயற்பாடின்மை பேசப்பட்டாலும் அது இலங்கை அரசால் கணக்கிலெடுக்கப்படுவதாக இல்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கையை அடுத்து இலங்கையின் வெளிநாட்டமைச்சர் உள்ளிட்டோர் அவருடைய அறிக்கையை மறுதலித்து வெளியிடுகின்ற விமர்சனங்கள், அறிக்கைகள், உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக வெளிப்புறத் தேவைகள் தேவையில்லை போன்றதான கருத்துகள் ஐக்கிய நாடுகளை சபையை அவமதிப்பதாகவே பேசப்படுகின்றன.

இந்த இடத்தில்தான் முன்னாள் சிறைச்சாலைகள் முகாமைத்துவ மற்றும் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் நடந்து கொண்ட விதம் பார்க்கப்படவேண்டியதாக இருக்கிறது. இவருடைய நடவடிக்கையானது இராஜதந்திரிகளதும், மனித உரிமை அமைப்புகளினதும், பல்வேறு அரசியல்வாதிகளினதும் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளானது. அவர் இராஜினாமா செய்தாலும் அது பயனற்றதே என்றும் கருத்துகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை தம்முடைய நாட்டின் பாதுகாப்பு அதிகாரத்தினைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் சபாதாரணமானாவைகளாக இருந்த போதிலும் சிறைச்சாலைகள் முகாமைத்துவ மற்றும் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயின் செயற்பாடு இலங்கைக்கு பெரியதொரு களங்கத்தினை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

ஐ.நா அமர்வில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் மீளாய்வு குறித்து இலங்கை அரசாங்கத்தால் சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் தெளிவுபடுத்தல்கள் வரவேற்கப்பட்டிருக்கின்ற அதேவேளை, பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் சரத்துக்களை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டக்கடப்பாடுகளுக்கு அமைவாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இதில், முகப்புத்தக விவகாரத்தில் கைதானவர்களது பெற்றோர் உறவினர்கள் ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோள் மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது. முகப்புத்தகத்தில் இட்ட பதிவுகளுக்காக 20 பேர்வரையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டடு தடுப்புக் காவலில் உள்ளனர். இதில் பயங்கரவாதச் சட்டமும் கருத்துச் சுதந்திரமும் இறுகியிருக்கின்றன.

இராணுவமயமாக்கல் இலங்கையில் நடைபெறுவதாக விமர்சிக்கப்படுகிறது. அமைதியான எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நினைவேந்தல்களை அனுசரிக்கும் நபர்களை, அரசாங்கம் தமது அதிகாரங்களை பயன்படுத்தி கைது செய்வதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களில் பலவந்தமாக தடுத்துவைக்கிறது. சிவில் சமூக குழுக்கள் மீது புதிய கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்றும் குற்றங்கள் முன்வைக்கப்படுகின்றன.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, மிக நீண்ட காலம் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மத தலைவர்களின் நியாயத்தை நிலைநாட்டுதல், சட்டத்தரணி ஹிஜாஷ் ஹிஸ்புல்லா நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக 16 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை என்பன இவற்றுள் சம்பந்தப்படுகின்ற நிலையில், கடந்த சில தினங்களில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகளுக்காகவும் சிலர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதாகியிருக்கின்றனர். இது இச்சட்டத்தை தளர்த்தலுக்கான சமிக்ஞையா என்று கேட்கத் தோன்றுகிறது. அல்லது நாட்டிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தலா என்று கேட்கத் தோன்றுகிறது.



## வாழ்வியல் தரிசனம்

நல்ல வழியில் முயல்வதனூடாகப் பெற்றுக்கொள்ளும் பலன்களும் தவறான செயல்கள் மூலம் பெற்றுக்கொண்ட விளைவுகளும் இணைந்தவையே வாழ்க்கை அனுபவங்கள் ஆகும்.

இவற்றை முழுமையாக உணரும் போதும், அதனூடாகப் பெற்றுக்கொண்ட பாடங்களைச் செயற்படுத்தினால், அனூகூலங்கள் மூலம் முழுமையான வெற்றியைப் பெற்றுக்கொள்ளலாம்.

செய்த தவறுகளைத் திரும்பச் செய்தல் ஆகாது. பெற்றுக் கொண்ட நல்ல அனுபவங்களை, இதயத்தில் இருந்து அகற்றவும் கூடாது.

சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப கட்சி மாறுவது போலன்றி, நற்குணம், உண்மை போன்றவற்றை வாழ்க்கையில் என்றும் விட்டுக்கொடுத்தல் ஆகாது. எந்த நிலையிலும் தன்னிலை மாறாது, உண்மையுடன் வாழ்ந்து வந்தால், வாழ்க்கை என்றும் ஆனந்தம், ஆனந்தமே!

உறவுகள் நண்பர்களுக்காக நீதியை விட்டுக்கொடுத்தலாகாது. விட்டுக்கொடுத்தால், மனச்சாட்சி தீயாகச் சுட்டெரிக்கும். அனுபவங்களை உதறுபவர்கள், வாழ்வோடு விளையாடுபவர்கள்; உணர்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நிம்மதி தேடும் கிராமம்

முல்லைத்தீவு, மூன்றுமுறிப்பு கிராமத்துக்கான உரிய போக்குவரத்து வசதியின்மை, காட்டு யானைகளின் தொல்லை என்பவற்றால் 211 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தினமும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படுகின்ற மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, பின்தங்கிய எல்லையோர கிராமமாகக் காணப்படுகின்ற மூன்று கிராம அலுவலர் பிரிவில் 211 குடும்பங்களைச் சேர்ந்த 652 பேர் வரையில் வசித்து வருகின்றனர். அதாவது, மூன்று முறிப்பு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கொம்பு வைத்த குளம், இளமருதன் குளம், மூன்று முறிப்பு உள்ளிட்ட கிராமங்களில் மேற்படி குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில், குறித்த பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லைகளும் ஏனைய காட்டு விலங்குகளின் தொல்லைகளும் தினமும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறன. குறிப்பாக, மேற்படி பிரதேசங்களில் குரங்கள் அதிகளவில் காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள குளங்களில் பயிர் செய்கை காலங்களில் செய்கை ஆரம்பிக்கப்பட்டது முதல் அறுவடை வரை தினமும் இரவு பகல் விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காவல் கடமையில் ஈடுபட வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், உயிர் ஆபத்துகளை கூட எதிர் கொள்ளும் நிலை காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனவே, இந்தநிலைமை குறித்து, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

–யது பாஸ்கரன்



## முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஊட்டிய

# சாணக்கிய தலைவர்

எம்.எஸ்.எம்.ஸாகிர்



முன்னாள் அமைச்சர், சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரப் மறைந்து, கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமையுடன் 21 ஆண்டுகள் பூர்த்தியாகின.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப், தனது அரசியல் வாழ்வை, 'ஈழத்தின் தந்தை' என்றழைக்கப்படும் தந்தை செல்வாவை முன்மாதிரியாகக் கொண்டு ஆரம்பித்தார்.

1976 இல் பொலிஸாரால் புத்தளம் பள்ளிவாசலில் கொல்லப்பட்ட முஸ்லிம் மக்கள் பற்றி, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் மௌனம் சாதித்த போது, இது பற்றிப் பேசிய ஒரேயொருவரான தந்தை செல்வாவை, மர்ஹூம் அஷ்ரப் வியந்து பாராட்டிப் பேசினார்.

1977 இல் தந்தை செல்வநாயகத்தின் மறைவுக்குப் பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியை வழிநடத்தும் பொறுப்பை அ.அமிர்தலிங்கம் ஏற்றார். இவர், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை (MULF) ஆரம்பித்து, அ. அமிர்தலிங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்தார். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் மேடைகளில் அ.அமிர்தலிங்கத்துடன் இணைந்த முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப், தமிழ் ஈழத்துக்காக வேகத்துடன் பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்டார். இவ்வேளையில்தான் "அண்ணன் அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்தை அமைக்க முடியாமல் போனால், தம்பி அஷ்ரப் அதைச் செய்வான்" என பகிரங்கமாக அறிவித்தார்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கல்முனை, சம்மாந்துறை, புத்தளம், மூதூர் ஆகிய இடங்களில் முஸ்லிம் வேட்பாளர்கள் 'சூரியன்' சின்னத்தில் களமிறக்கப்பட்டனர். இதில் மர்ஹூம் அஷ்ரப் போட்டியிடவில்லை. இத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்று, நாட்டின் வரலாற்றில் தமிழ்க்கட்சி ஒன்று இரண்டாவது அதிகூடிய ஆசனங்களைப் பெற்றது. ஆயினும், இந்தக் கட்சியில் போட்டியிட்ட முஸ்லிம்கள் எவரும் வெற்றி பெறவில்லை.

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை வேறு கோணத்தில் மர்ஹூம் அஷ்ரப் உற்று நோக்கினார். 1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தமிழர்களை மட்டும் போட்டியிட வைத்தது. அத்தேர்தலில் முஸ்லிம்களை இணைக்க மர்ஹூம் அஷ்ரப் முன்வைத்த கோரிக்கை மறுக்கப்பட்டது. இதனால், மர்ஹூம் அஷ்ரப், தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியிலிருந்து முற்றாக விலகி, தனித்துச் செல்ல தீர்மானித்தார்.

தமிழ், சிங்கள அரசியலிலிருந்து வேறுபட்ட, சுயாதீனமான அரசியல் தேவைப்பாடு முஸ்லிம்களுக்கு அவசியம் என்பதை உணர்ந்த மர்ஹூம் அஷ்ரப், அஹமட்லெப்பையுடன் கூட்டுச் சேர்ந்து, 1981 செப்டெம்பர் 21 இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் புதிய கட்சியை காத்தான்குடியில் ஆரம்பித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஆரம்பத்தில் அரசியல் பிரச்சினைகளை விட, அதிகமாக சமூக கலாசார விடயங்களில் அக்கறை கொண்ட கிழக்கு மாகாண அமைப்பாகவே செயற்பட்டது.

1985ஆம் ஆண்டு கல்முனை - காரைதீவு, தமிழ் - முஸ்லிம் இனமுரண்பாடுகள் மர்ஹூம் அஷ்ரபை பாதித்ததால் கொழும்பு நோக்கி குடிபெயர்ந்தார். இந்தக் கொழும்பு நோக்கிய நகர்வு, அவரது அரசியலின் மைல்கல்லாக அமைந்தது.

இவரது அரசியல் முயற்சிகளுக்கு, ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர்முஸ்தபா அடங்கலாக முஸ்லிம்கள் பலர் ஒத்துழைப்பு நல்கினர். இவ்வேளையிலே அஷ்ரபின் அறிமுகம் ஹக்கீமுக்கு ஏற்பட்டது.

கிழக்குக்கு அப்பாலும் முஸ்லிம் காங்கிரஸ் விரிந்து செல்ல வேண்டிய தேவைப்பாட்டை இனங்கண்ட மர்ஹூம் அஷ்ரப், 1986 ஆம் ஆண்டு நவம்பர் 29 இல் புஞ்சிபொரளையில் நாடளாவிய ரீதியில் கட்சி மாநாடொன்றைக் கூட்டி, முஸ்லிம் காங்கிரஸின் கட்சித் தலைமைப் பொறுப்பை அஹமத்லெப்பையிடம் இருந்து பொறுப்பேற்ற மர்ஹூம் அஷ்ரப், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அகில இலங்கை ரீதியிலான கட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து, கட்சியின் நோக்கங்களை மீளமைத்து, யாப்பை திருத்தி எழுதி, 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரச்சின்னத்துடன் தேர்தல் ஆணையாளரால் அங்கிகரிக்கப்பட்ட கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அவரது வாழ்வில் நடந்த சுவாரஷ்யமான நிகழ்வுகளில் ஒன்று அதாவது, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மூலம் பாராளுமன்றத்துக்கு முதன் முதலாகத் தெரிவாகி, அங்கு உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்த போது, பேச ஆரம்பித்த மர்ஹூம் அஷ்ரப், "பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக இந்த உயர்ந்த சபையிலே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த முதல் முஸ்லிம்..." என்று பேச ஆரம்பித்த போது, பாராளுமன்றத்தில் உள்ள ஏனைய முஸ்லிம் தலைவர்கள் கூச்சலிட்டு, பேச முடியாதளவு தடுத்தனர். அப்போது சபாநாயகராக இருந்த மர்ஹூம் எம்.எச் முஹம்மத், சபையை அமைதிப்படுத்தி, மீண்டும் பேச வாய்ப்பளித்தார். அப்போதும் அஷ்ரப், முன்பு சொன்னது போன்று பேச, திரும்பவும் கூச்சலிட்டனர். அப்போது குறுக்கிட்ட சபாநாயகர், "அவர் என்னதான் சொல்கிறார் என்று பார்ப்போம். அவரைப் பேச விடுங்கள்" என்று கூறிய போது, அஷ்ரப் மீண்டும் பேச ஆரம்பித்தார். "பாராளுமன்ற வரலாற்றில் முதற் தடவையாக, இந்த உயர்ந்த சபையிலே உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த முதல் முஸ்லிம் கட்சித் தலைவர் என்ற வகையில் நான் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்று கூறிய போது, அனைவரும் வாயடைத்துப் போயினர்; சபையும் அமைதியானது.

அந்தவேளையில் ஐ.தே.க, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போன்ற தேசிய கட்சிகள் மூலம்தான் முஸ்லிம்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினர். சபையில் அனைவரும், 'அஷ்ரப் முதல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்' என்று கூறப்போகிறார் என்றே கூச்சலிட்டனர். மிகுந்த சாணக்கியமும் சமர்த்தியமும் ஆற்றலும் மும்மொழிப் புலமையும் மிக்கவர்தான் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறையில், முஹம்மத் ஹுசைன் விதானை, மதீனா உம்மாஹ் தம்பதியின் மகனாக 1948 ஒக்டோபர் 23 ஆம் திகதி மூன்று சகோதரிகளுக்கு ஓர் ஆண் மகனாக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்திலும், பின்னர் இடைநிலைக்கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி, கல்முனை உவெஸ்லி பாடசாலை, அலெக்ஸாண்ட்ரியா கல்லூரியிலும் கற்ற முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப். பின்னர் 1975 ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாக நியமனம் பெற்றார். பின்னர் சட்டமாணி, சட்ட முதுமாணிப் பட்டங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். 1995 இல் அமைச்சராக இருக்கும் போதே சட்டமுதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர், 1997 இல் ஜனாதிபதி சட்டத்தரணியானார்.

பேரியல் இஸ்மாயில் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட மர்ஹூம் அஷ்ரபுக்கு, அமான் அஷ்ரப் எனும் ஓர் ஆண் மகனும் உண்டு.

அரசியல் மட்டுமல்லது, கவிஞர், எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட இவர், 'நான் எனும் நீ' எனும் கவிதை நூலையும் எழுதி, அதனை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இந்தியாவில் இருந்து கவிக்கோ அப்துல் ரஹ்மானை அழைத்து வெளியிட்டார். அவருக்கு பொற்கிழி, பொன்னாடை வழங்கிக் கௌரவித்தார். அந்த நேரத்தில் அவரது நூலே கவிதை நூல்களிலே மிகப் பெரிய நூலாகக் காணப்பட்டது. அந்நூலில் அவரது மரணம் பற்றிய கவிதை எழுதப்பட்டிருந்தது குறித்து அவரது மறைவுக்குப் பிறகு பலரும் சிலாகித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது.


பெருந்தலைவர் மர்ஹூம் அஷ்ரப், சாதாரண மனிதன் முதல் உயர்ந்த இடத்திலுள்ளோர் என யார் வந்து நூல் விழாவுக்கு அழைத்தாலும் செல்வார்; சன்மானமும் வழங்குவார். அவ் விழாவில் உரையாற்றும் போது அரசியல் பேசமாட்டார்.

2000, செப்டெம்பர் 16 அன்று, இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ - 17 ரக ஹெலிக்கொப்டரில் அம்பாறை நோக்கிப் பயணித்த போது, விமானம் விபத்துக்குள்ளானதில் எம்.எச்.எம். அஷ்ரப் உயிரிழந்தார்.

---

## பேராசிரியர் சந்த்ரா குணவர்தன:

# கல்விப் புலத்தில் முன்னுதாரண அறிவாளுமை






ஜே.டீ. கரீம்தீன்
(PhD Reading – UKM)
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வி பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இலங்கையின் மூத்த கல்வியியலாளர், ஆராய்ச்சியாளர், பேராசிரியர் சந்த்ரா குணவர்தன 30.08.2021 அன்று, தனது 81ஆவது வயதில் எம்மிடமிருந்து விடைபெற்றார். பேராசிரியர் சந்த்ரா குணவர்தனவின் மறைவு, இலங்கை கல்வியியலாளர்களிடத்தில் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

1940.03.15 அன்று அளுத்கமையில் பிறந்த பேராசிரியர், இலங்கை கல்விப் புலத்தில் பல்வேறு பணிகளை ஆற்றியவர். இன, மத, பால், மொழி வேறுபாடுகளின்றி அவர் ஆற்றிய கல்விப் பணிகள் காத்திரமானவை.

கல்வி மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் ஆராய்ச்சி கலாசாரத்தை இலங்கையில் பொதுவாகவும் பல்கலைக்கழகங்களில் குறிப்பாகவும் ஏற்படுத்தியவர் அவர். கல்வியியலாளர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியில் பங்களிப்புச் செய்து, பல ஆளுமைகளை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தவராகவும் கருதப்படுகிறார்.

இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் இரண்டு கல்வி பீடங்களில் ஒன்றான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி பீடத்தை உருவாக்கிய (Mother of Faculty of Education- OUSL) பெருமை இவரையே சாரும். அவர் மரணிக்கும் வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வி பீடத்தின் Emeritus Professor ஆக தனது கல்விப் பணியினை ஆற்றினார்.

இவர் 1993 - 1995 வரை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறை தலைவராகவும் 1995 முதல் 2001 வரை அப்பீடத்தின் பீடாதிபதியாகவும் 2003 முதல் 2006 வரை கல்வி பீடத்தின் பீடாதிபதியாகவும் கடமையாற்றியவர்.

மட்டுமன்றி, பல சந்தர்ப்பங்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தராகவும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார். Sri Lanka Association for the Advancement of Education (SLAAED) எனும் நிறுவனத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான இவர், 1987 காலப் பகுதியில் அதன் உதவித் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக கல்வி பீடத்தில் இவர் விரிவுரையாளராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை பேராசிரியர் வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கு அவர் விண்ணப்பிக்கத் தீர்மானித்திருப்பதை அறிந்த கொழும்பு பல்கலைக்கழக கல்வி பீட விரிவுரையாளர்கள், எதிர்காலத்தில் அங்கேயே பேராசிரியராக அவர் பணியாற்ற எவ்வித போட்டியுமின்றி வழிவிடுவதாகவும் தொடர்ந்தும் கொழும்பு பல்கலைக்கழகத்திலேயே பணியாற்றுமாறும் அவரிடம் வேண்டுகோள் விடுத்தனர். எனினும், தனது பங்களிப்பினை மேலும் விரிவுபடுத்தும் நோக்கிலும் கல்வி சார்ந்த தனது தலைமைத்துவ பங்களிப்பை பரந்தளவில் வழங்கும் நோக்கிலும் அவர் 1993இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வித் துறை பேராசிரியராக பதவி ஏற்றார்.

கலாநிதி டீ.ஏ. கொத்தலாவல, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக கடமையாற்றியதை அடுத்து பேராசிரியர் சந்த்ரா, இரண்டு தவணைகள் இப்பீடத்தில் பீடாதிபதியாக கடமையாற்றினார். அக்காலப்பகுதியில் பல இளம் விரிவுரையாளர்களின் வாண்மைத்துவ விருத்திக்கு வழிகாட்டினார். மேலும் இக்காலப்பகுதியில் முன்பள்ளி கல்வி தொடர்பான பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

முன்பள்ளி பருவ துறையை தொடங்குவதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரமும் இவரது தலைமைத்துவத்தின் விளைவால் பெறப்பட்டதாகும். அது மட்டுமல்லாது, இவரது வழிகாட்டலின் பேரில் விஷேட துறையும் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட துறை, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் மட்டுமே காணப்படுகின்றமை இங்கு கோடிட்டுக் காட்டத்தக்கது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஒரு துறையாக இருந்த கல்வித் துறையை (Department of Education) மாணவர்களின் கணிசமானளவு தொகையினரையும் போதுமானளவு விரிவுரையாளர்களையும் கொண்டு இத்துறை வளர்ச்சி அடைந்ததன் காரணமாக, பேராசிரியர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் கல்வித்துறையை ஒரு பீடமாக (Faculty of Education) கட்டியெழுப்பி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கிகாரத்தைப் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிலும் வெற்றி கண்டார்.

புதிய பீடத்தினை மேலும் வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வி பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்கள் மற்றும் உபவேந்தர்களான பேராசிரியர் உமா குமாரசாமி, பேராசிரியர் உபாலி விதான பதிரன ஆகியோரின் ஆதரவையும் பெற்றார்.

அடிப்படையில் இவர் ஓர் ஆசிரியர். ஆசிரியத்துவத்தையே விரும்பினார். இவரது ஆசிரியரான மிகப் பிரபல்யமான பேராசிரியர் சுவர்ணா ஜயவீரவால் ஈர்க்கப்பட்டு, கல்வி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். பேராசிரியர் சுவர்ணா ஜயவீரவினுடனான நட்பின் மூலம் பெண் ஆராய்ச்சி மையத்தில் (CENWOR) பணியாற்ற அவருக்கு வாய்ப்பு கிடைத்ததுடன் பல்வேறுபட்ட தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் பங்கேற்கும் வாய்ப்புகளும் பல சஞ்சிகைகளிலும் புத்தகங்களிலும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் வாய்ப்புகளும் கிட்டின.

CENWOR, National Assessment & Accreditation Council, India Commonwealth of Learning Canada, University of London, Sri Lanka Association for the Advancement of Science & Sri Lanka National Education Commission போன்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை இணைத்துக் கொண்டு, பல்வேறுபட்ட செயற்றிட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, நாட்டின் கல்விக் கொள்கைகளை வகுப்பதையும் அவற்றை செயற்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதையும் செவ்வனே மேற்கொண்டுள்ளார்.

இளம் விரிவுரையாளர்களுக்கு புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொடுத்து, வெளிநாடுகளில் அவர்களின் முதுமாணி, கலாநிதி கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

Commonwealth of learning (COL) உடனான இவரது தொடர்பு குறிப்பிடத்தக்க பல விளைவுகளைத் தந்துள்ளன. COL உதவியுடன் இவர் பலதர வகுப்பு கற்பித்தல், மாணவர் நட்பான பாடசாலை போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். COL இன் உதவியுடன் கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவையில் பணியாற்றுவோரின் வாண்மைத்துவத்தை விருத்தி செய்யும் நோக்கில் MA in Teacher Education எனும் சர்வதேச கற்கை நெறியை அறிமுகப்படுத்தினார். இவ்வாறு இவரது கல்விப் பங்களிப்பானது சர்வதேசம் வரை சென்றது.

தனது குடும்பத்தில் கடைசி பிள்ளையான இவருக்கு, நான்கு சகோதரர்கள் உள்ளனர். இவரது கணவரும் ஒரு கல்வியியலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில், கல்வியின் பங்களிப்பானது மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த வகையில் அவரது பங்களிப்புகளைக் காத்திரமாக வழங்கியதுடன், எதிர்காலத்தில் கல்வி ரீதியான பங்களிப்புகளை ஆற்றக்கூடிய சிறந்த கல்வியியலாளர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் அதற்கான தளங்களையும் ஒருங்கே உருவாக்குவதில் இவர் நல்கிய பங்களிப்பு மிகவும் மகத்தானது.

கல்வியினூடாக சிறந்ததொரு தேசத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் அவருக்கிருந்த தொலைநோக்குக்கு 'இது உனது நாடு; இது உனது பல்கலைக்கழகம்; இது உனது பீடம்' எனும் அவரது கூற்று சான்று.

அந்தவகையில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விப் புலத்திலுள்ள அனைவரும் சிறந்த ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு, பேராசிரியர் சந்த்ரா குணவர்த்தனவை முன்னுதாரணமாகக் கொள்வது இன்றியமையாததாகும்.

# கொலைவெறி தண்டவாளம்

## ஓட்டமாவடியில் உயிர்களைக் காவு கொள்ளும் காபட் வீதி வளைவு

எச்.எம்.எம். பர்ஸான்

என்னதான் பாதுகாப்பாக நாம் பயணம் செய்தாலும், விபத்துகள் எம்மை எதிர் நோக்கியே வந்துகொண்டிருக்கின்றன.

இறைவனின் நாட்டம் ஒருபுறமிருக்க, நாம் பயணம் செய்யும் போது நம்மில் ஏற்படும் பொடுபோக்கும், அசமந்தப் போக்குமே நாம் விபத்தில் சிக்கிக் கொள்ளவும், பிறரை விபத்துக்குள்ளாக்கவும் காரணமாக அமைகின்றன.

ஓர் ஊரை விட்டு வேறு ஊருக்கு, நாம் பிரயாணம் செய்யும் போது, மிகக் கவனமாகவும் நிதானமாகவும் பயணம் செய்ய வேண்டும். அந்த ஊரின் வீதிகளின் அமைப்புகள், வளைவுகள், பள்ளம் படுகுழிகள், அடிக்கடி விபத்துகள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றை நாம் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறு அறியாமல் நாம் பயணிக்கும் போது தான், விபத்துகளை எதிர்கொண்டு, பல்வேறு ஆபத்துகளை நம்மில் பலரும் சந்திக்கின்றனர்.

வீதிகள் பயணிக்க அழகாக இருக்கின்றன என்பதற்காக நாம் ஒருபோதும் கண்ணைக் கட்டிக் கொண்டு பயணிக்க முடியாது. விபத்து என்பது நேரான பாதையிலும் வரும்; கரடுமுரடான பாதையிலும் வரும். எனவே, நாம் எந்த இடத்தில் பயணிக்கிறோமோ அந்தந்த இடங்களில் மிகவும் அவதானமாக பயணிக்க வேண்டும்.

சில ஊர்களில், அடிக்கடி விபத்துகள் இடம்பெறும் சந்திகளையும் வீதிகளையும் அவ்வப்போது கேள்விப்பட்டு வருகிறோம். அவ்வாறான இடங்களில் ஒன்றாகத்தான் கிழக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தில், ஓட்டமாவடி பாலத்தால் குறுக்கறுக்கும் தண்டவாளம் காணப்படுகிறது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை, வாழைச்சேனை ரயில் நிலைய நிர்வாக எல்லைக்கு உட்பட்ட இவ் இடத்தில், விபத்துகள் இடம்பெறாத நாள்களே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்த இடத்தில் நாளாந்தம் விபத்துகள் நடைபெறுகின்றன.

ஓட்டமாவடியில் இரண்டு பாலங்கள் காணப்படுகின்றன. ஒரு பாலம், ரயில் மாத்திரம் செல்வதற்குப் பயன்படுகிறது. அதேபோன்று, புதிய பாலத்தால் பாதசாரிகள், வாகனங்கள், கால்நடைகள் செல்கின்றன.

புதிய பாலத்தால் செல்லும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் செல்வோரே கூடுதலாக விபத்துக்குள்ளாகின்றனர்.

குறித்த இடத்தில், காபட் வீதி வளைந்து செல்லும் பகுதியாக காணப்படுகிறது. அதில் தண்டவாளம், காபட் வீதியில் இருந்து சற்று உயரமாகக் காணப்படுவதால், அதில் பயணிக்கும் வாகனங்கள் சறுக்கி விபத்துக்குள்ளாகின்றன.

தண்டவாளத்தைக் குறுக்கறுக்கும் காபட் வீதி, திட்டமிடலுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டால், குறித்த இடத்தில் தொடர்ந்தும் இடம்பெறும் விபத்துகளை தடுக்க முடியும் என்று பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தூர இடங்களில் இருந்து வரும் நபர்கள், இந்த இடத்தின் தன்மைகள் தெரியாமல் மிக வேகமாகப் பயணித்து, விபத்துகளில் சிக்கிக் கொண்ட சம்பவங்கள், வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஏராளமாகப் பதிவாகியுள்ளன.





> குறித்த இடத்தில், காபட் வீதி வளைந்து செல்கிறது. அதில் தண்டவாளம், காபட் வீதியில் இருந்து சற்று உயரமாகக் காணப்படுவதால், வாகனங்கள் சறுக்கி விபத்துக்குள்ளாகின்றன

அத்துடன், ஏனைய காலங்களை விட, மழைக் காலங்களில் கூடுதலாக விபத்துகள் நடைபெறும் இடமாகவும் இந்த வளைவு மாறியுள்ளது. வரும் மாதங்களில் மழை பெய்யக் கூடிய வானிலை உள்ளதால், அதிலும் விபத்துகள் நடக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன.

இதனால், மதிப்பிட முடியாத பல மனித உயிர்கள் இழக்கப்படுவதுடன், கை, கால்கள் உடைந்த நிலையில், அங்கவீனர்களாகத் தங்களது வாழ்வை அமைத்துக் கொள்ளும் நிலையிலும் பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியை கடந்துதான் வாழைச்சேனை கடதாசி ஆலை, கோறளைப்பற்று மத்தி. பிரதேச செயலகம், காவத்தமுனை வைத்தியசாலை, வயல் நிலங்கள், அரிசி ஆலைகள், பாடசாலைகள் உட்பட ஏராளமான தொழில் நிலையங்களுக்கு செல்லும் ஒரே வீதியாக இது காணப்படுகிறது.

இதனால், பயணிக்கும்போது தங்களின் உயிர்களை கையில் பிடித்துக்கொண்டு தினந்தோறும் அச்ச உணர்வுடன் பயணிப்பதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு, சைக்கிளில் பயணித்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் அந்தத் தண்டவாளத்தில் சறுக்கி விழுந்து, கணவன் தெய்வீகமாக உயிர் தப்பியதுடன் மனைவி மீது டிப்பர் வாகனம் ஏறியதில் அவர் சம்பவ இடத்தில் மரணமடைந்த சோக நிகழ்வும் நடைபெற்றது.

அதேபோன்று சில மாதங்களுக்கு முன்னர் மழை பெய்து கொண்டிருந்த போது, இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்ற போது, அந்தத் தண்டவாளத்தில் சறுக்கி விழுந்ததில், ஒருவர் மரணமடைந்ததுடன் மற்றவர் ஆபத்தான நிலையில் மிக நீண்ட நாள்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்தார்.

இதேபோன்று, அந்த இடத்தில் ஏராளமான விபத்துச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறு அந்த இடத்தில் நடந்த விபத்துச் சம்பவங்களை பட்டியல் இட்டுக் கொண்டே செல்லலாம்.

அந்த இடத்தால் சுமார் 40 வருடங்களாகப் பயணிக்கும் நபர் ஒருவர், மிகவும் மன உளைச்சலுடன் அந்த இடத்தால் பயணிப்பதாக எம்மிடம் கவலையுடன் கூறினார்.

"நான் செல்லும் போது, ஏராளமான விபத்துகளை பார்த்துள்ளேன். அதில் பல உயிர்கள் அந்த இடத்தில் துடிக்கத் துடிக்க சென்றுள்ளதை, நான் கண்டுள்ளேன். இதனால் நான் இன்றும் கூட, மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். ஓட்டமாவடியில் விபத்து என்று நான் கேள்விப்பட்டால், எனக்கு இந்தத் தண்டவாளப் பகுதி மாத்திரம் தான் நினைவில் வருவதுண்டு. அந்த இடத்தை கடக்கும் போது, நான் உட்பட யாரும் விபத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்ற பிரார்த்தனையோடுதான் தினந்தோறும் அதைக் கடந்து செல்வதுண்டு" என்று அந்நபர் எம்மிடம் கவலையுடன் தெரிவித்தார்.

அந்நபர் போன்று, ஏராளமான நபர்கள் அந்த இடத்தில் தாம் கண்டு கொண்ட விபத்துச் சம்பவங்களை பகிர்ந்து கொண்டனர். "நாம் கடமையில் இருக்கும்போது, எங்களது கடமைகளில் ஒன்று போல, அவ்விடத்தில் விபத்துக்கு உள்ளாகும் நபர்களைத் தூக்கி விடும் ஒரு வேலையையும் நாம் பார்த்து வருகிறோம்" என்று அவ்விடத்தில் அமைந்துள்ள ரயில்வே கடவை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இரவு நேரங்களில் இருள் சூழ்ந்துள்ள அந்த இடத்துக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்றும் அவ் வீதியைப் பயன்படுத்தும் நபர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேபோன்று குறித்த இடத்தில், 'பயணிகள் அவதானமாகப் பயணிக்க வேண்டும்' என்று காட்சிப் பலகை ஒன்றை அமைக்க வேண்டும் என்று பலரும் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தி, பொது மக்கள் எவ்வித ஆபத்துக்களுமின்றி குறித்த வீதியால் பயணம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.



# முடக்கத்துக்குள் சாதனை

## கழித்துவிட்ட உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி, 45 நாள்களில் ட்ரக்டர் தயாரிப்பு



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

"பயன்பாட்டுக்கு உதவாமல், கழிக்கப்பட்ட பொருட்களை வைத்துக் கொண்டு, அதாவது, இரண்டு சக்கர உழவு இயந்திரத்தின் எஞ்சின், கியர் பெட்டி, போன்றவற்றையும் ஏனைய உதிரிப்பாகங்களையும் தேடி எடுத்து, முற்றாக புதிய வடிவிலான, சிறிய அளவிலான உழவு இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளேன். குறைந்த அளவில் விவசாயம் செய்பவர்களுக்கு, இந்த உழவு இயந்திரம் உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இதனை மேற்கொண்டேன். நான் உருவாக்கிய இந்தப் புதிய உழவு இயந்திரத்திரத்துக்கு, அரசாங்கம் அதற்குரிய பதிவுச் சான்றிழைப் பெற்றுத்தந்தால், மென்மேலும் விவசாயத்துக்குத் தேவையான கருவிகளையும் இயந்திரங்களையும் உருவாக்க முடியும்" என்கிறார், மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிகுடி கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி கோகுலரஞ்சன்.

மண்முனை தென் எருவில் பற்று பிரசேத்திலுள்ள களுவாஞ்சிகுடி கிராமத்தைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்தான் கந்தசாமி கோகுலரஞ்சன். சிறிய வயதிலிருந்தே தொழில் நுட்பத்துறையிலும், இலத்திரனியல் துறையிலும், ஆர்வமானவர். மத்திய கிழக்கு நாடுகளில் கணினி திருத்துநராக தகுந்த வேதனத்துக்கு தொழில் புரிந்து வந்துள்ளார்.

தற்போது, பல கம்பனிகளுக்கும் நிறுவனங்களுக்குமுரிய கணினிகளைப் பழுது பார்த்துக் கொடுத்து வருகிறார். கொவிட் - 19 காலத்தில் கணினி திருத்தும் வேலைகள் குறைவடைந்துள்ளதால், 45 நாள்களில், சுமார் நான்கு இலட்சம் ரூபாய் செலவு செய்து, கழிக்கப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு, புதிய ரக உழவு இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

விவசாயக் கிராமத்தில் பிறந்ததாலும், விவசாயத்தில் அதிக நாட்டமுள்ளதாலும், தாம் எவரிடமும் கையேந்தாமல் விவசாயிகளுக்கு புதிய உழவு இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டுத்தான் இவ்வுழவு இயந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளதாகவும், இதற்கு அரச அங்கிகாரம், பதிவுச் சான்றிழ் போன்றவற்றைப் பெற்றுத்தர அரசாங்கம் உதவ வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுக்கின்றார்.

கோகுலராஞ்சன் புதிதாக வடிவமைத்துள்ள சிறியரக உழவு இயந்திரத்தை அப்பகுதி மக்கள், விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டு வருகின்றனர்.

தனது முயற்சிக்கு கிடைத்த வெற்றி குறித்து, கோகுல ரஞ்சன் மேலும் கூறியதாவது:

நான், பொது எலக்றிசிற்றி டிப்ளோமா கற்கை நெறியைப் மட்டக்களப்பு இ.ரி.ஐ. நிறுவனத்தில் பூர்த்திசெய்தேன். சிறிய வயதிலிருந்தே ஏதாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆசையும் எண்ணமும் எனக்குள் இருந்து வந்தது. 2001ஆம் ஆண்டு ஒரு மோட்டார் சைக்கிளைப் புதிதாக உருவாக்கினேன். அக்காலத்தில் அதனை வெளியில் ஓடமுடியாமலிருந்தது. பின்னர், அப்போது எதுவித வேலைவாய்ப்பும் இன்மையால் 2003ஆம் ஆண்டு, கணினி திருத்துனராக வெளிநாட்டுக்குச் சென்றேன். 2016ஆம் ஆண்டு வரைக்கும் அங்கு தொழில் புரிந்துவிட்டு, மீண்டும் நாட்டுக்கு வந்துவிட்டேன்.

தற்போது களுவாஞ்சிகுடியிலுள்ள எனது வீட்டிலிருந்தபடியே பல தனியார் கம்பனிகளுக்கும், நிறுவனங்களுக்கும் கணினி பழுதுபார்த்துக் கொடுக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றேன்.

எனினும், தற்கால கொவிட் - 19 காலத்தில் எனக்குரிய தொழில் ஓடர்கள், மிக மிகக் குறைந்தமையால், வீட்டில் வீணாகப் பொழுதைக் கழிக்காமல் அதனைப் பிரயோசனமாக்கி எனக்குள்ளிருந்த கண்டுபிடிப்பு அல்லது புத்துருவாக்கம் வெளிப்பட வேண்டும் என்ற நோக்குடன் புதிய ரக உழவு இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளேன். எனத் தெரிவிக்கின்றார்.

எனக்கு ஐ.ரி துறையைக் கற்றாலும் விவசாயத்துறையில் அதிக ஈடுபாடும் உள்ளது. தற்கால நவீன உலகில் ஆட்களைக் கொண்டு செய்யும் வேலைகளை இயந்திரங்களைக் கொண்டுதான் செய்கின்றார்கள். அந்த வகையில் விவசாயத்திற்கு நிலத்தைப் பண்படுத்துதல் இன்றியமையாத ஒன்றாகும். நிலத்தை உழுதல், சமப்படுத்துதல், போன்றவற்றிற்கு என்னிடமுள்ள அறிவுத்திறனை எவ்வாறு பயன்படுத்தலாம் என சிந்தித்துத்தான் நான் இந்த சிறியரக புதிய வடிவிலான உழவு இயந்திரத்தை உருவாக்கியுள்ளேன்.

> 'முயற்சி திருவினையாக்கும்' என்ற கோட்பாட்டுக்கு இணங்க, வெளிக்காட்டியுள்ளார்

இதற்கு சுமார் 4 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. இதனை உருவாக்குவதற்கு 45 நாள்களில் முழு வடிவத்தையும் பூர்த்தி செய்தேன். எலக்றிக்கல், எலற்றோனிக், மெக்கானிக்கல் ஆகிய மூன்று துறைகளும் எனக்குத் தெரித்திருப்பதால், இன்னும் வசதி வாய்ப்புகள் வரும் பட்சத்தில், இதனை மேலும் மெருகூட்டி முழு எலக்ரோனிக் கொன்றோளுக்குக் கொண்டு வரலாம்.

எதிர்காலத்தில், புதிய புதிய இயந்திரங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் என்னிடத்தில் உள்ளது. குறிப்பாக அடுத்தாக, பெற்றறியிலும், அந்த பெற்றறியில் சேமிக்கப்படும் மின்சாரம் குறைவடைந்ததும், சூரிய சக்தியிலும் இயங்கும் ஓட்டோ ஒன்றை உருவாக்கலாம் எனத் தீர்மானித்துள்ளேன். எனது படைப்புகளுக்கு அரச அங்கிகாரமும் அதற்குரிய சான்றிதழ்களும் கிடைக்கப்பெறும் பட்சத்தில், நான் இன்னுமின்னும், மென்மேலும் எனது புத்துருவாக்கங்களை முன்கொண்டு செல்ல வாய்ப்பாக அமையும்" எனத் தெரிவிக்கின்றார் புத்துருவாக்குநரும், கண்டுபிடிப்பாளருமான கந்தசாமி கோகுலரஞ்சன்.





நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மனிதன் ஏதோ ஒரு விதத்தில் பல்துறைசார்ந்து முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றான். தற்போதைய கொவிட் - 19 காலத்திலும் சில முயற்சியுடையோர் வீட்டில் முடங்கிக் கிடக்காமல், தமது பொழுதை வீணாகக் கழிக்காமல், அவற்றை மிகுந்த பிரயோசனமாகப் பயன்படுத்துபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

எனினும், கண்டு பிடிப்புகளுக்கும் புதிய உற்பத்திகளுக்கும் இறக்குமதிகளுக்கும் சர்வதேசத்தையே நம்பியிருக்கும் இலங்கையில், ஆங்காங்கே எங்கேயே மூலை முடுக்குகளில், தத்தமது திறமைகளைக் காண்பித்து, புதிய கண்டு பிடிப்புகளையும் உற்பதிகளையும் வெளிக்காட்டுபவர்களாக நம்நாட்டுக் கண்டுபிடிப்பாளர்களும் புத்துருவாக்குநர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

தற்கால அவசர யுகத்தில், மனிதன் தான், தான் முன்னேறுகின்ற துறைகளில் முன்னேறிக் கொண்டிருக்கின்ற போதிலும், கொவிட் - 19 காலத்தில் மக்கள் வீடுகளிலேயே முடங்கிக்கிடக்கின்ற போதிலும், இவ்வாறு ஆங்காங்கசே தத்தமது திறைமைகளை வெளிப்படுத்துகின்றபோது, அவற்றைத் தட்டிக் கொடுக்கவும் அவ்வாறானவர்களை மேலோங்கச் செய்துவிடவும், துறைசார்ந்த அரச நிருவாத்தினரும், ஏனைய அரச சார்பற்ற அமைப்புகளும் அவர்சார்ந்த சூழலும் சமூகமும் முன்னின்று செயற்படல் வேண்டும்.

அதுபோன்றுதான், மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி கிராமத்திலுள்ள இளம் கண்டுபிடிப்பாளர், புத்துருவாக்குநர் என்ற தகுதியுடன் திகழும் கந்தசாமி கோகுலரஞ்சன், தனது அயராத முயற்சியின் பலனாக 2001 ஆம் ஆண்டு, உருவாக்கிய மோட்டார் சைக்கிள், தற்போது உருவாக்கியுள்ள உழவு இந்திரம், அவர் எதிர்காலத்தில் உருவாக்கத்திட்டமிட்டுள்ள பெற்றறி, சூரிய சக்தியில் இயங்கும் ஓட்டோ, விவசாயத்துக்குத் தேவையான ஏனைய இயந்திரங்கள் என, அவரது புதிய கண்டுபிடிப்புகளை, பொருளாதார ரீதியில் வீடும் நாடும் பயன்பெறக்கூடயவாறு, இதுவரையில் யாரும் உதவியிருக்கவில்லை.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற கோட்பாட்டுக்கு இணங்க, இலங்கையின் ஒரு மூலையில் இருந்து கொண்டு, தனது திறமையை வெளிஉலகுக்கு வெளிக்காட்டியுள்ளார். இவ்வாறானவர்களை மேலும் ஊக்கப்படுத்தல் வேண்டும். பழுதடைந்த வெவ்வேறு வாகனங்களின் உதிரிப்பாகங்களை எடுத்து, புதிதாகப் படைத்துள்ள இந்த உழவு இயந்திரம், வீதியில் பயணிப்பதற்குதிய அரச அங்கிகார ஆணை, அதாவது வழங்கமாக வாகனங்களுக்கு வழங்கப்படுகின்ற வாகன பதிவுச் சான்றிதழ், அனுமதிப்பத்திரம், காப்புறுதி போன்றவற்றையும் பெறுவதற்கு உரிய அனுமதி வழங்கப்படும் பட்சத்தில், கந்தசாமி கோகுலரஞ்சனால், எதிர்காலத்தில் அவர் திட்டமிட்டுள்ள புதிய வாகனங்களை உருவாக்கவும் மக்கள் அதனை கொள்வனவு செய்யும் அளவுக்கு வளர்ச்சியடைந்து, அது ஓர் உற்பத்தி நிறுவனமாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 18 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.